ஜனவரி 2011 January | இதழ் 240 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION

channel

2010
2011




WIKILEAKS

20 வது ஆண்டு
th Year

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்


## ஊடக தரிசனங்கள்

பத்தாண்டுகளுக்கு முன்னர், புதிய மிலேனியம் பிறக்கின்ற வேளையில் உலகம் பலமாக அச்சுறுத்தப்பட்டது.

'எல்லாமே முடியப் போகின்றது' என்றவாறு ஊடகங்களில் வெளிவந்த தகவல்களும் செய்திகளும் அறிவிப்புகளும் மரண பீதியை ஏற்படுத்தி நின்றன.

புதிய நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்துக்கு விடை கொடுத்து விட்டோம். நினைத்தது போன்று எதுவும் நடக்கவில்லையாயினும், எதிர்பாராத பல பிரளயங்களும் பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன என்பது உண்மை.

சமாதானம் என்ற வலையில் ஈழத்தமிழர்களைச் சிக்கவைத்த சர்வதேசம், அவர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அடித்த சாவுமணி (தற்காலிக), உலகச் சரித்திரத்தில் அழிக்க முடியாதது.

இதன்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களும், அதனூடாக நடைபெற்ற இனவழிப்பும் இன்று 'உலகப் புகழ்' பெற்று நிற்கின்றன.

இவைகளை வெளிக்கொணருவதில் 'சானல் 4' ஊடகம் ஆற்றி வருகின்ற பங்கு மகத்தானது. சிறீலங்கா அரசை மட்டுமன்றி, இனவழிப்பில் அதற்குத் துணைபோன நாடுகளையும் 'சானல் 4' விழி பிதுங்க வைத்துள்ளது.

இதனை ஆதாரமாகக் கொண்டு உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum - GTF) முன்னெடுக்கும் செயற்பாடுகள் எங்கோ ஒரு நம்பிக்கைக் கீற்றை காட்டி நிற்கின்றது.

லண்டன் ஒக்ஸ்போர்ட்டில் உரையாற்றவென குடை கொடி ஆலவட்டத்துடன் சென்ற மகிந்த ராஜபக்ச, வெட்கித் தலைகுனிந்தவாறு திரும்பிச் சென்றதில் 'சானல் - 4' ஊடகத்தின் பங்களிப்பு அளப்பரியது. அதனைச் சரியான முறையில் பயன்படுத்தியதில் உலகத் தமிழர் பேரவை தனித்துவமான இடத்தில் நிற்கின்றது.

இலங்கை அரசு தொடர்பான சர்வதேசத்தின் அபிப்பிராயம் எவ்வாறானது என்பதை 'விக்கிலீக்ஸ்' இணையத்தளம் அம்பலப்படுத்தி வருகின்றது. 'வீக்கிலீக்ஸ்' பகிரங்கப்படுத்தி வருவது அமெரிக்காவின் பார்வை என்றே பார்க்கப்படினும், அதில் மேற்குலகின் கரிசனையும் அடங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்குள் எப்படியாவது இலங்கையைக் கொண்டு வருவதே அமெரிக்க அரசின் திட்டமென்று அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'த பொஸ்ரன் குளோப்' பத்திரிகை தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையிலேயே 'விக்கிலீக்ஸ்' தகவல்கள் அமைகின்றன என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டுப் பிறப்பு சில நம்பிக்கைகளை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இவைகளைச் சரியான முறையில் எடுத்துச் சென்று நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் உலகத் தமிழர் பேரவை முன்னின்று செயற்படும் என்பதை அதன் தலைவர் வணபிதா இமானுவல் அடிகளாரின் புத்தாண்டுச் செய்தி தெரிவிக்கின்றது.

தமிழினப் படுகொலைக்குத் தலைமை தாங்கிய மகிந்த ராஜபக்சவையும் அவரது குழுவினரையும் தண்டனைக்குள்ளாக்கும் பொறுப்பு புகலிடத் தமிழரையே சார்ந்தது.

திரு எஸ். திருச்செல்வம்


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 20வது ஆண்டு மலர் வெளியீட்டுடன் இணைந்த வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவம் பெப்ரவரி 12ஆம் திகதி

1991 பெப்ரவரியில் முதலாவது இதழ் விரித்த 'தமிழர் தகவல்' சஞ்சிகை தனது ஆர்ப்பாட்டமில்லாத இதழியல் பணியில் இருபது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

கனடாவின் அச்சு ஊடகத்துறையில் மூத்த வெளியீடு என்ற தனிப் பெருமையுடன் ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதியில் வெளிவருவதோடு, தரத்திலும் தனித்துவமான முத்திரை பதித்திருப்பது இதன் சாதனை.

தமிழர் தகவலின் இருபதாவது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும், இருபதாவது வருட விருதுகள் வழங்கும் வைபவமும் முன்னைய ஆண்டுகளைப் போன்று, இவ்வருடமும் அடக்கமான நிகழ்வாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அடுத்த மாதம் (பெப்ரவரி) 12ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணியிலிருந்து ஆறு மணி வரை மூன்று மணிநேர நிகழ்வாக இவ்வைபவம் நடைபெறும்.

அழைக்கப்படுபவர்கள் மட்டுமே இவ்வைபவத்தில் பங்குபற்ற முடியுமாதலால், அவர்களுக்கான அழைப்பிதழ்கள் இந்த மாதம் (ஜனவரி) 31ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தபாலில் கிடைக்கும்.

இருபதாவது ஆண்டு மலர் பல சிறப்பான படைப்புகளைக் கொண்டிருக்கும். கனடாவின் பல்துறைச் சிறப்பாளர் பலர் முதன்முறையாக தகவலில் எழுதியிருப்பது முக்கிய குறிப்பிடும் அம்சமாகும்.

கலை, இலக்கியம், சமூகம் மற்றும் பொதுப்பணிகளின் முன்னிலையாளர்களும், தகுதியான மாணவமணிகளும், வணிக முன்னோடிகளும் விருதுகள் பெறவுள்ளனர்.

இருபதாவது ஆண்டு வைபவத்தில் நீங்கள் பங்குபற்ற விரும்பினால் உங்கள் பெயர் தொலைபேசி இலக்கம் என்பவற்றை 416 920 9250 இலக்கத்தில் பதிவு செய்யவும். அல்லது உங்கள் பெயர், தபால் விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை tamilsinfo@sympatico.ca மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

## புதிய குடிவரவாளர் சேவை ஒதுக்கீட்டில் ஒன்ராறியோவுக்கு 44 மில்லியன் வெட்டு; 35 சமூக நிறுவனங்கள் நேரடிப் பாதிப்பு

## $44 million cut from settlement programs in Ontario 35 newcomer settlement agencies directly affected

கனடாவின் புதிய குடிவரவாளர் சேவைக்கான நிதியில் மிகப்பெரிய வெட்டினை கனடிய மத்திய குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சு அறிவித்துள்ளது. இதனால், ஒன்ராறியோ மாகாணமே பாரியளவில் பாதிப்பினைச் சந்திக்கின்றது.

ஒன்ராறியோவின் நிதி ஒதுக்கீட்டில் 44 மில்லியன் டாலர்கள் வெட்டப்பட்டுள்ளது. இதனால் ஒன்ராறியோவில் குடிவரவாளர் சேவையில் ஈடுபட்டுள்ள முப்பத்தியைந்து சமூக நிறுவனங்கள் தங்களது சேவையைச் சுமார் எண்பது வீதத்தினால் குறைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ரொறன்ரோ நகரம் உட்பட ரொறன்ரோ பெரும்பாகத்தின் 14 சேவை நிறுவனங்கள் நூறு வீதம் நிதியுதவியை இழக்கவிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் கணிசமான குடியமர்வுச் சேவை கவுன்ஸிலர்களும் மற்றும் வேலைவாய்ப்பு, மொழிப்பயிற்சி போன்ற துறைகளைச் சேர்ந்த பணியாளர்களும் வேலையிழப்பது நிச்சயமாகியுள்ளது.

2011 மார்ச் மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வரையில் 44 மில்லியன் டாலர் வெட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வேலையிழக்கும் பணியாளர்களுக்கு மூன்று மாத முன்னறிவித்தலை சம்பந்தப்பட்ட சேவை நிறுவனங்கள் இந்த மாத முதல் வாரத்தில் வழங்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் புதிய குடிவரவாளர்கள் தங்களுக்கான சேவைகளைப் பெறுவதற்கு எங்கே செல்வதென்று தெரியாது தவிக்கும் நிலை உருவாகின்றது.

> "This is a terrible decision - It cannot be allowed to stand," Toronto Central Liberal MP Bob Rae said. "We are going to do everything we can to stop it and change it."


இந்த நிதி வெட்டினால் ரொறன்ரோ லான்ட்ஸ்ரவுணிலுள்ள குடியமர்வுச் சேவை நிறுவனமொன்று தனது எட்டுப் பணியாளர்களுக்கு மூன்று மாத வேலைநீக்க முன்னறிவித்தல் கொடுக்க நேர்ந்துள்ளதாக அறிவித்துள்ளது.

மத்திய அரசாங்கத்தின் குடியமர்வுச் சேவை நிதி வெட்டினை லிபரல் கட்சியின் பேச்சாளர் ஜெராட் கென்னடி, என். டி. பியின் பேச்சாளர் ஒலிவியா செள ஆகியோர் வன்மையாகக் கண்டித்து அறிக்கை விடுத்துள்ளனர். ஆனால், நிதி வெட்டுக்குப் பொறுப்பான குடிவரவு அமைச்சர் ஜெசன் கெனி அதற்கான விளக்கத்தைக் கூறி தமது நடவடிக்கையை நியாயப்படுத்தியுள்ளார்.

ஒன்ராறியோவில் குடியேறும் புதிய குடிவரவாளர் தொகை வரவரக் குறைவதாலும், புதியவர்கள் வேறு மாகாணங்களை நாடிச் செல்வதாலும் ஒன்ராறியோவுக்கான ஒதுக்கீட்டில் குறைப்பு ஏற்படுத்தியதாக அவர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"2005ஆம் ஆண்டில் 145,000 குடிவரவாளர்கள் ஒன்ராறியோவைத் தமது வாழ்விடமாகத் தெரிவு செய்தனர். ஆனால் கடந்த வருடத்தில் இத்தொகை 106,000 ஆகக் குறைந்துள்ளது" என்று அமைச்சர் கெனி கூறியுள்ளார். தற்போது அத்லாந்திக் மற்றும் மேற்குக் கனடாவுக்கே புதிய குடிவரவாளர்கள் நாட்டம் காட்டுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"புதிய குடிவரவாளர் ஒருவருக்கு தலா 3,400 டாலரை குடியமர்வுச் சேவைக்காக ஒன்ராறியோ மாகாண அரசுக்கு வழங்குகின்றோம். ஆனால், கனடாவின் மற்றைய மாகாணங்களுக்கு ஒருவருக்கு 2,900 டாலர் என்ற அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

இருதய நோயும் புற்று நோயுமே கனடாவின் முக்கிய உயிர் கொல்லி நோய்களாக இருக்கின்றன. 2007ஆம் ஆண்டில் கனடாவில் மரணித்தோரில் 51 வீதமானோர் இந்நோய்களால் பாதிக்கப்பட்டோராவர். இவ்வாறு மரணித்தோர் தொகை 235,217. புற்றுநோய் மரணம் 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் வேகமாக அதிகரித்து வருவதாகவும், மொத்த மரணங்களில் இது 30 வீதமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியுபெக் மாகாண அரசு அங்குள்ள ஒருவருக்கான அடிப்படைச் சம்பளமாக 9 டாலர் 65 சதத்தை நிர்ணயம் செய்துள்ளது. இது, இந்த வருடம் மே மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும். தற்போது அடிப்படைச் சம்பளமாக 9 டாலர் 50 சதம் உள்ளது. உணவகங்களில் 'ரிப்ஸ்' பெறும் ஊழியர்களின் சம்பளம் 8 டாலர் 25 சதத்திலிருந்து 8 டாலர் 35 சதமாக அதிகரிக்கின்றது.

வடஅமெரிக்காவில் மது அருந்தும் இளையோர் தொகை குறைந்து வரும் அதேவேளையில், மர்ஜுனா என்னும் மதுபோதைப் பாவனை அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உயர் வகுப்பு பாடசாலை மாணவர்கள் மத்தியில் 6.1 வீதத்துக்கு இது அதிகரித்துள்ளது. 8ஆம் 10ஆம் வகுப்பு மாணவர்கள் தொகையும் அதிகரித்து வருவது அவதானிக்கப்படுகின்றது.

'லீகல் எய்ட்' என்ற பெயரில் அகதிகளுக்கு வழங்கப்படும் சட்ட நிதியுதவியை நிறுத்துவது பற்றி மத்திய அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. தற்போது வருடமொன்றுக்கு சுமார் பதினைந்து மில்லியன் அமெரிக்க டாலர்கள் இதற்குச் செலவிடப்படுகின்றது. இந்த வருடம் மேலும் இரண்டு மில்லியன் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டதையடுத்து புதிய பிரச்சனை எழுந்தது.

எதிர்க்கட்சிகளின் முழுமையான எதிர்ப்பைப் பெற்றுள்ள கனடிய புதிய குடிவரவுச் சட்ட மூலம் (சி-49) நாடாளுமன்றத்தில் தேக்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனைச் சட்டமாக்க தேவையான வாக்குகள் கிடைக்காத நிலையில், இதன் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் நிறுத்தம் கண்டுள்ளது. சமூக அமைப்புகளும் இந்தச் சட்ட மூலத்தை வன்மையாக எதிர்த்து வருகின்றன.

அரசியல் கட்சிகள் தொடர்பான கருத்துக் கணிப்புகள் மக்களை விசனத்தில் ஆழ்த்தி வருகின்றன. வெவ்வேறு நிறுவனங்களின் கருத்துக் கணிப்புகளும் வெவ்வேறு வகையான முடிவுகளைத் தருவதே இதற்குக் காரணம். ஒரு கணிப்பு லிபரல் கட்சி முன்னணியில் நிற்பதாகக் கூற, மற்றொரு கணிப்பு கன்சர்வேடிவ் முதலிடத்தில் நிற்பதாகக் கூறி இதன் நம்பகத் தன்மையை அழித்து வருகின்றன.

வீடுகளில் இடம்பெறும் களவு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் கனடாவில் வன்கூவர் நகரமே முதலிடம் வகிக்கின்றது. ரொறன்ரோ நகருடன் ஒப்பிடுகையில் வன்கூவரில் 200 மடங்கு அதிகமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க-கனடிய பிரதான 17 நகரங்களில் குற்றச் செயல்களைப் பொறுத்தளவில் வன்கூவர் மூன்றாவது இடத்தை வகிக்கின்றது.

கனடிய செனட் சபைக்கு இரண்டு புதிய செனட்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருவாளர்கள் லரி சிமித், டொன் மெரிடித் ஆகிய இருவருமே புதியவர்கள் 105 உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபையில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்தவர்கள் தொகை தற்போது 54 ஆகியுள்ளது. இதுதவிர லிபரல் சார்பானவர்கள் 46 பேரும், புறகிறஸ் கன்சர்வேடிவ் சார்பானவர்கள் இரண்டு பேரும் உள்ளனர்.

கனடிய ஓய்வூதியத் திட்டத்தில் கொண்டுவரவிருந்த திருத்தங்கள் ஆறு மாதம் வரைக்கும் பின்போடப்பட்டுள்ளது. அல்பேர்ட்டாவில் கடந்த மாதம் நடைபெற்ற மாகாண நிதியமைச்சர்கள் மாநாட்டில் மத்திய நிதியமைச்சர் கொண்டு வந்த திருத்தங்களுக்கு பூரண ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால், தனியார்துறை ஓய்வூதியத் திட்டத்துக்கு அனைத்து மாகாணங்களினதும் ஆதரவு கிடைத்துள்ளது.

## தமிழ் படைப்பாளிகள் கழக முப்பெரும் விழா

கனடா தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் வழங்கும் தமிழ்ப் புத்தாண்டு 2042 - தைப்பொங்கல் - திருவள்ளுவர் பிறந்த நாள் ஆகியவற்றை உள்ளடக்கிய முப்பெரும் விழா இந்த மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணி முதல் கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழந்தைகளுக்கு ஏடு தொடக்கல், ஆடல், பாடல், ஓவியப் போட்டி ஆகியன இடம்பெறும். 2005- 2010 ஆண்டுகளில் பிறந்த தனித்தமிழ் சூட்டப்பட்ட குழந்தைகளுக்கு ஆயிரம் டொலர் பரிசு இங்கு வழங்கப்படும். இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய முடிவு நாள் 2011 ஜனவரி 10.

தங்கள் பிள்ளைகளது வடமொழிப் பெயரை சட்டப்படி தனித்தமிழ் பெயராக மாற்றிய பெற்றோருக்கும் பரிசுகள் வழங்கப்படு மென அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்து பிள்ளைகளுக்குத் தலா 100 டொலர் என வழங்கப்படும். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி பொ. கயிலாசநாதனும் அவரது பாரியாரும் கலந்து கொள்வர்.

## தெற்காசிய புயலுக்கு 'ஜல்' என்ற பெயர் எவ்வாறு வந்தது?

கடந்த நவம்பர் மாதம் தெற்காசியாவில் வீசிய புயலுக்கு 'ஜல்' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. இந்தப் பெயர் எவ்வாறு வந்தது? வங்கக் கடல் மற்றும் அரபிக்கடல் பகுதியில் உருவாகும் புயல்களுக்கு ஆங்கில அகர வரிசைப்படி 2004ஆம் ஆண்டிலிருந்து பெயர் சூட்டப்பட்டு வருகின்றது. இதற்கென இப்பகுதி நாடுகளைக் கொண்ட ஒரு குழு இயங்குகின்றது.

இந்த நாடுகளின் வானிலை அவதான நிலையங்கள் புதிதாகத் தோன்றும் புயல்களுக்கு முற்கூட்டியே பெயர்களைத் தயார் செய்து வைத்திருக்கின்றன. இதுவரை 29 புயல்களுக்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்தியில் 'ஜல்' என்றால் தண்ணீர். இம்முறை பெயர் சூட்டும் வாய்ப்பு இந்தியாவுக்குக் கிடைத்ததால், அந்நாட்டு மொழியில் 'ஜல்' என்று பெயர் சூட்டப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canada silent on Sri Lankan war crimes

**Amarnath Amarasingam**

Why do some conflicts attract more attention than others? Why, for example, did throngs of celebrities hold rallies and concerts to shed light on the atrocities occurring in Darfur, while dozens of other conflicts and human rights violations are ignored by the international community?

The Tibetan fight against Chinese domination is, for example, a cause célèbre around the world. Northwest of Tibet, the Uighurs, numbering around 7 million people, have been waging a similar struggle against the Chinese government for centuries.

However, as Clifford Bob writes in his award-winning book Marketing Rebellion, "No Hollywood stars or corporate moguls write fat checks for the Uighurs. No Uighur leader has visited with a U.S. president or won the Nobel Peace Prize." In stark contrast to the Tibetans, many do not even know they exist.

The Uighurs, Bob argues, have essentially failed a marketing contest, a game which only a handful of social movements have learned to play well. While I am not equating the Uighur cause with that of the Tamils, both communities have spent years attempting to gain international legitimacy.

Scholars like Bob have argued that social movements must market their struggle if they are to gain the support and backing of non-governmental organizations, as well as the compassion of people around the world. Individuals lead busy lives, and read about many social ills throughout the course of their day, so social movements must compete for their attention just as they compete for all other resources. The conflict in Sri Lanka is no different.

In early 2009, UN Secretary-General Ban Ki-moon, U.S. President Barack Obama, and U.K. Foreign Secretary David Miliband all called for an end to hostilities in Sri Lanka, noting that civilian lives were being "lost on a large scale." Members of the Tamil diaspora around the world also took to the streets to shed light on the conflict, but the international community remained largely silent. As if recognizing the need for the marketing of conflicts in today's geopolitical landscape, Miliband stated that civilians in Sri Lanka are the victims of "what at the moment is a war without witness."

While many human rights organizations sounded the alarm about war crimes committed by both the Liberation Tigers of Tamil Eelam (LTTE) and the Sri Lankan government during the final push of the war, new evidence is coming to light. Though there may never be a full record of the abuses carried out by the Sri Lankan government or the Tamil Tigers against civilian populations in Sri Lanka, a particularly disturbing video of what appears to be Sri Lankan soldiers indiscriminately shooting Tamils was broadcast by Britain's Channel 4 News on Nov. 30.

This video is not new. A few months after the end of the long and bloody Sri Lankan civil war in May 2009, Channel 4 News broadcast footage "apparently showing government troops summarily executing Tamils." The Sri Lankan government swiftly declared the video to be a fake, but a United Nations investigation later concluded that it "appeared authentic." Now, a year and a half later, another video is available. The new video shows the same incident, according to Channel 4 News, "but rather than stopping after the execution of a second bound man, it continues and the camera pans left to reveal the naked and dead bodies of at least seven women" and several other blindfolded individuals.

About three minutes into the disturbing video, the camera fixes on the body of a deceased, unidentified woman. She is blindfolded, her hands appear bound behind her back, her breasts are draped with a white cloth, and her underwear has been pulled down to her thighs. The camera stays on her for close to a minute, during which a soldier walks by and removes the cloth covering her breasts. The soldiers are heard laughing, while the camera remains on her nude body. One soldier can be heard saying, "She has fallen in a nice way. It looks new. Looks like no one has even touched her thighs." As Channel 4 news pointed out, many of the comments heard in the background suggest that these women were sexually abused before being shot.

With the broadcasting of what has come to be called the "Channel 4 video," the international community has renewed its call for an independent investigation into war crimes in Sri Lanka. Human Rights Watch recently repeated its call "for the United Nations to undertake a full investigation into wartime abuses by both government forces and the rebel Liberation Tigers of Tamil Eelam."

War crimes lawyer Julian Knowles told Channel 4 News that the newly broadcast video "is clear evidence of the execution of unarmed combatants or civilians." According to Knowles, "It doesn't matter which they are, they're both prohibited under the Geneva Convention and they are both ranked as what we call a grave breach of the Geneva Convention so they are crimes in international law."

Canada, on the other hand, has remained woefully silent on the issue of war crimes in Sri Lanka. The revelation of the Channel 4 video as well as any subsequent evidence deserves international attention. Canada should join the international community in calling for an independent investigation into war crimes and reaffirm its commitment to human rights.

*Amarnath Amarasingam is a doctoral candidate at Wilfrid Laurier University, and is currently completing his dissertation titled, "Pain, Pride, and Politics: Sri Lankan Tamil Nationalism in Canada."*

Courtesy: Toronto Star, Dec 17 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# குழந்தை வேணுமா?

ஆசைப்பட்ட அனைவருக்கும் அனைத்துமே கிடைத்துவிடுவதில்லையே'. குழந்தை இல்லாதவர்களுக்கும் இது பொருந்தும். அவர்களின் ஆசை பலிக்காததற்குக் காரணங்கள் பலவாகலாம்.

உலகெங்கும் குழந்தை இல்லாதவர்கள தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. இங்கிலாந்தில் ஆறு தம்பதிகளில் ஒருவர் என்ற விகிதத்தில் குழந்தையின்மை இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

இருந்தபோதும் வைத்தியத் துறையின் அளப்பரிய முன்னேற்றம் காரணமாக டெஸ்ட் ரியூப்பில் குழந்தையை உருவாக்கக் கூடிய முறை அறிமுகமானதால் குழந்தை இல்லாதவர்களிடையே பெரும் நம்பிக்கை ஏற்பட்டது. டெஸ்ட் ரியூப் குழந்தை என்பது உண்மையில் ஒரு வகை செயற்கைச் சினையூட்டல் முறையாகும்.

அதாவது உடலுக்கு வெளியே ஆய்வு கூடத்தில் பெண்ணின் முட்டையானது சினையூட்டப்படும். அதனால் உண்டாகும் கருவை பின் கருப்பையில் பதித்து, இயற்கையாக வளரச் செய்வர். செயற்கை என்பது முகமறியா வேறொருவரின் விந்தைக் கொண்டு சினையூட்டல் எனப் பொருள்படாது.

கணவனின் விந்தைக் கொண்டே பெரும்பாலும் சினைப்படுத்தப்படுகிறது. அவரின் லிகிதத்தில் விந்தணுக்கள் இல்லாவிட்டாலும் கூட அவரின் விதையிலிருந்தே விந்தணுக்களை வெளியே பிரித்து எடுத்து சினையூட்டப்படும் வைத்திய வசதி இப்பொழுது உண்டு. அதுவும் முடியாத கட்டத்தில் மட்டுமே வேறு ஒருவரின் விந்தைத் தானமாகப் பெறவேண்டிய தேவை ஏற்படலாம்.

இருந்தபோதும் In Vitro Fertilisation- IVF எனப்படும் டெஸ்ட் ரியூப் குழந்தையானது வேண்டுவோர் எல்லோருக்கும் சுலபமாகக் கிட்டிவிடுவதில்லை. இதற்கும் காரணங்கள் பல.

முதலாவதாக பெண் போதிய அளவு முட்டையைத் தனது சூலகத்திலிருந்து உற்பத்தி செய்வதைத் தூண்டுவதற்கான மருந்துகள் கொடுக்க வேண்டும். இம் மருந்துகள் மிக விலை உயர்ந்தவை. இங்கிலாந்தில் மருந்துகளுக்கு கிட்டத்தட்ட 1500 ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ் வரை செலவாகும்.

அத்துடன் தொடர்ந்து 5 வாரங்கள் வரை மருந்து உட்கொள்ள வேண்டி நேரிடும். எனவே பணத்துடன் காலமும் செலவாகும்.

இச்சிகிச்சை முறையின் போது மருந்து கொடுத்த பின் உற்பத்தியாகும் முட்டைகளை அல்ரா சவுண்ட் துணையுடன் வெளியே எடுத்து கணவரின் அல்லது கொடையாளியின் விந்துவைக் கொண்டு கருவூட்டுவர்.

இப்பொழுது In Vitro Maturation- IVM என்ற புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்த முறை விரைவானது மலிவானது. இந்த முறை மூலம் ஆணும் பெண்ணுமான இரட்டைக் குழந்தைகள் Radcliffe Infirmary in Oxford ல் பிறந்திருக்கினறன.

இது எப்படியான முறை என்று கேட்கிறீர்களா?

கடுமையான விலை கூடிய மருந்துகள் உபயோகிக்கப்படவில்லை. மருந்துகள் உபயோகித்து பெண்ணின் சூலகத்திலிருந்து முட்டைகள் வெளிவர நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை.

இது எப்படி என்கிறீர்களா?

வளர்ச்சி பூர்த்தியடையாத முட்டைகளை சூலகத்திலிருந்து எடுத்து மருத்துவ ஆய்வுகூடத்தில் செயற்கை ஊடகத்தில் 24 முதல் 48 மணி நேரம் வரை வளர்ச்சியுறச் செய்தபின் ஆணின் விந்துடன் சினையூட்டி இறுதியாக கருப்பையில் இடுவதுதான் இம்முறையாகும்.

ஆயினும், தற்பொழுது இம்முறை பொலிசிஸ்டிக் ஓவறி (Polycystic ovaries) என்ற பிரச்சனை உள்ள பெண்களுக்கே செய்யப்படுகிறது. காரணம் என்னவென்றால் அத்தகைய பெண்களின் சூலகத்தில் மாதாந்தம் 16 முட்டைகள் வரை உண்டாகின்றன. ஆனால், ஏனைய சாதாரண பெண்களில் மாதாந்தம் 4 முட்டைகள் வரையே உண்டாகின்றன.

ஆயினும், இம்முறையில் கூடிய அனுபவம் பெற்றதும் ஏனைய பெண்களுக்கும் விஸ்தரிக்க உள்ளார்கள். ஏற்கனவே, 400க்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்த முறை மூலம் உலகளாவிய ரீதியில் பிறந்துள்ளார்கள் என்பது நம்பிக்கை ஊட்டுகிறது.

செயற்கைச் சினையூட்டல் துறை வேகமாக வளர்ந்து வருகிறது. எதிர்காலத்தில் ஆண் குழந்தையா பெண் குழந்தையா வேண்டும் என்பதையும் நீங்களே தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

அதுமட்டுமல்ல குழந்தையின் நிறம், அதன் முடி சுருட்டையாக இருக்க வேண்டுமா வேண்டாமா போன்ற தேர்வுகளும் கூட உங்களுக்கே இருக்கும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக நவம்பர் மாதத்தில் மாணவர்கள் தமது முன்னேற்ற அறிக்கையைப் பெற்றுள்ளனர். இப் பெயரிலிருந்தே இதன் கருத்து புலனாகிறது. அதாவது ஒரு மாணவனின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (Progress Report). இற்றைக் காலம் வரை வழங்கப்பட்டது தேர்ச்சி அறிக்கை (Report Card). அதாவது மாணவன் பாடங்களில் தேர்ச்சி அடைந்துள்ளாரா என்பதனைக் காட்டும் அறிக்கை.

ஒரு காலத்தில் புள்ளிகள் வழங்கப்பட்டு, பின்பு அது எழுத்துக்களாக மாறி (letter grades – eg A, B, C,) இன்று அது ஒரு குறியீடாக (□) மாறியுள்ளது. மாணவனின் பாட அடைவுக்குப் பதிலாக மாணவனின் வேலை செய்யும் பாங்கு (Work Habits) கற்றல் திறன்கள் (Learning skills) பற்றியே இக் குறியீடுகள் விளங்கும். அவை 3 தரமாக உள்ளன - சிரமப்பட்டு முன்னேறுகிறார் - Progressing with difficultiy.
நன்றாக முன்னேறுகிறார் - Progressing well.
மிகவும் நன்றாக முனினேறுகிறார் - Progressing very well.

பாடசாலையின் புதிய கல்வியாண்டு Septemberல் ஆரம்பமாகி Novemberல் ஒரு தேர்ச்சி அறிக்கை வழங்க வேண்டுமென்றால் அதற்கான ஆயத்தங்களை ஆசிரியர்கள் இரண்டு கிழமைகளுக்கு முன்பே செய்தல் வேண்டும். இந்தக் குறுகிய காலத்தில் மாணவர்கள் பற்றிய போதிய விளக்கம் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்க மாட்டாது. அதே போல் மாணவனுக்கும் பாடம் சம்பந்தமான விளக்கங்கள், ஆசிரியரின் கற்பித்தலை கிரகிக்கும் திறன்கள், பாடசாலைக்கும் சக மாணவர்களுக்கும் அமைந்து போதல் (Adjustments) இன்னோரன்ன விடயங்களில் அறிவு ஏற்பட போதிய கால அவகாசம் Sept – Nov ஏற்பட மாட்டாது. ஆகவே இந்தக் குறுகிய காலத்தில் ஒரு தேர்ச்சி அறிக்கையை வழங்குதல் மூலம் பெற்றோருக்கு ஒரு தப்பான அபிப்பிராயத்தையே ஏற்படுத்துவதாகப் பல வருட காலம் ஆசிரியர்கள் குறைப்பட்டபடி இருந்தனர். ஆகவே இந்தப் புதிய முறை வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

கற்றல் நிரல்களாகிய பொறுப்புணர்வு (Responsibility) ஒழுங்கு பேணல் (Organization), சுயாதீனமான வேலை (Indipendant work), கூட்டு உழைப்பு (Collaboration), சொந்தமான முயற்சி (Initiative), சுய கட்டுப்பாடு (Self Regulation) முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்புகளும் இலகுவாக விளங்கக் கூடிய வகையில் சாதாரண



கனகேஸ்வரி நடராஜா

# புதிய முன்னேற்ற அறிக்கை
# The New progress card

மொழியிலேயே காணப்படுகின்றன. ஆகவே இப் புதிய முன்னேற்ற அறிக்கை பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் உகந்ததாகும். (Kids friendly and parents friendly).

இப் புதிய முன்னேற்ற அறிக்கை ஒரு புதிய முயற்சியாக இருப்பதால் இது பற்றி பலவிதமான வினாக்கள் பெற்றோர் மனதில் எழுவது இயல்பு - ஆகவே அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

1. வினா - வளரும் வெற்றி (Growing success) என்றால் என்ன?
விடை - ஒன்ராறியோ பாடசாலைகளில் 1-12 வரை மதிப்பீடு, கணிப்பீடு, மற்றும் தேர்ச்சி அறிக்கை வழங்கல் (Assessment, Evaluation, and Reporting) சம்பந்தமாக கல்வி அமைச்சு கையாளும் புதிய கொள்கைத் திட்டம்.

2. வினா - முன்னேற்ற தேர்ச்சி அறிக்கைக்கும், மாகாண தேர்ச்சி அறிக்கை அட்டைக்கும் (Progress Report Card, and Provincial Report) இடையேயுள்ள வேறுபாடு என்ன?
விடை - முன்னேற்ற அறிக்கை எதிர்பார்க்கப்பட்டவற்றை அடையும் முயற்சியில் கண்ட பொதுவான முன்னேற்றத்தையும்இ மாணவனின் கற்கும் திறன் மற்றும் வேலை செய்யும் பழக்கம் ஆகியவற்றில் தெரிந்த விருத்தியையும் காட்டும். மாகாண தேர்ச்சி அறிக்கை - மாணவர்கள் பாடத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டவற்றை அடைந்த அளவினையும் உங்கள் பிள்ளையின் கற்கும் திறன், மற்றும் வேலை செய்யும் பழக்கம் ஆகியவற்றில் தெரிந்த விருத்தியை காட்டும்.

3. வினா - எதிர்பார்க்கப்பட்டவற்றை சாதிக்கும் காலப் பகுதிகள் எவை?
விடை - 1. செப்டம்பர் தொடக்கம் Jan/Feb வரையும்
2. Jan/Feb தொடக்கம் June வரை

4. வினா - எனது பிள்ளையின் கற்கும் திறன்கள் மற்றும் வேலை செய்யும் பழக்கத்தின் விருத்தி பற்றிக் கூறும் அறிக்கை எப்படி அமைந்து இருக்கும்.
விடை - மாணவர்களின் கற்கும் திறன்கள் மற்றும் வேலை செய்யும் பழக்கத்தின் விருத்தி பற்றி பின்வரும் பதங்கள் உபயோகிக்கப்படும்.
E - மிகவும் சிறந்தது. G - நன்று S - திருப்தியானது N - முன்னேற்றம் தேவை

5. றொறன்ரோ கல்விச் சபை எந்த நாட்களில் தேர்ச்சி அறிக்கைகளை வழங்கும்?

- நவம்பர் 12 - 18 - 2010 - ஆரம்பநிலை முன்னேற்ற தேர்ச்சி அறிக்கை வீடு செல்லும். சிரேஷ்ட பாலர் வகுப்புக்கான TDSB பாலர் வகுப்பு முன்னேற்ற தேர்ச்சி அறிக்கை வீடு செல்லும்.
- பெப்ரவரி 11-17-2011 - ஆரம்ப நிலை மாகாண தேர்ச்சி அறிக்கை அட்டை 1 வீடு செல்லும். TDSB கனிஷ்ட பாலர் வகுப்புக்கான சுருக்கத் தேர்ச்சி அறிக்கை (Summary Report) வீடு செல்லும்.
- ஜூன் 28 அல்லது 29 - ஆரம்பநிலை மாகாண தேர்ச்சி அறிக்கை அட்டை 2 வீடு செல்லும். கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பாலர் வகுப்புக்கான TDSB பாலர் வகுப்பு முன்னேற்ற தேர்ச்சி அறிக்கை வீடு செல்லும்.

6. வினா - எனது பிள்ளையின் இரண்டாம் நிலை தேர்ச்சி அறிக்கை அட்டைகளை எப்பொழுது எதிர்பார்க்கலாம்?
விடை - 9 - 12 தரங்களுக்கு உரிய மாகாண தேர்ச்சி அறிக்கை அட்டைகள் விநியோகிக்கப்படும் திகதிகள் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடும். பிள்ளைகளின் பாடசாலையோடு தொடர்பு கொள்வதே சிறந்தது.

மேற்கூறப்பட்ட வினாக்களை விட மேலதிக வினாக்கள் பல பெற்றோர் மனதில் தோன்றலாம். உங்கள் பிள்ளையின் பாடசாலையோடு தொடர்பு கொண்டு மேலதிக விளக்கங்களைப் பெறுதல் மிகவும் முக்கியம். மொழிப் பிரச்சனை காணப்படும் இடத்து மொழிபெயர்ப்பாளர்களை தந்து உதவுமாறு கேட்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

முறையான ஒரு தேர்ச்சி அறிக்கையை பெப்ரவரியில் வழங்குதல் காலம் கடந்த செயல் என ஒரு சில கல்விமான்கள் கருதுகின்றனர். அரையாண்டு முடித்த பின்பு மாணவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய கால அவகாசம் →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ரி. சிங்கம்

# காதலர் நாள் பெப்ரவரி 14

பாதிரியார் வலன்ரைனினால் அஸ்டோரியசுக்கு எழுதப்பட்ட கவிதை வரிகள்:

*"விழி இருந்தும் வழியில்லாமல் - மன்னன்*
*பழி தாங்கிப் போகிறேன்.*
*விழி இழந்து, பார்க்க வழியிழந்து நீ*
*மனவலி தாங்காது அலறும் ஒலி கேட்டும்*
*உனை மீட்க வழி தெரியாது மக்களுக்காக*
*பலியாகப் போகிறேன் - நீ*
*ஒளியாய் வாழ்! பிறருக்கு வழியாய் இரு!*
*சந்தோஷ ஒளி உன் கண்ணில் மின்னும்...."*

இன மத மொழி நாடு என்ற வேறுபாடின்றி சகல மக்களாலும் பரிசுகள் பரிமாறி, ஒன்று கூடி விருந்துண்டு ரோஜாப் பூக்கள் பரிமாறி, விழிகளால் கதை பேசி, கருத்தொருமித்து ஆடிப்பாடிக் களித்திடும் வலன்ரைன் நாள் என்னும் காதலர் தினம், துயர் தோய்ந்த ஒரு வரலாறுடன் ஆரம்பமானது. கி. பி. 270 ஆவது வருடம், பெப்ரவரி 14ஆம் திகதி வலன்ரைன் என்னும் இரக்க சுபாவமுடைய பாதிரியார் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தலை துண்டிக்கப்பட்ட நாள். காதலர்களை இணைத்து வைத்து, அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ வழிவகுத்த இந்தப் பாதிரியார் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்ட இரத்தக் கறை படிந்த நாள், இன்று வரை வலன்ரைன் நாள் என வருடாவருடம் அதே திகதியில் கொண்டாடப்படுகின்றது.

கொடூரமாகவும் கோமாளித்தனமாகவும் கொடுங்கோல் ஆட்சி புரிந்த ரோமானியச் சக்கரவர்த்தி இரண்டாவது கிளாடியின் அவசர முடிவாலும் முட்டாள்தனமான கட்டளைகளாலும் அவனது இராணுவத்தினர் தலைமறைவாகியும், விலகியும் போனார்கள். புதிய வீரர்களைச் சேர்க்க முடியாத திண்டாட்டம் ஆரம்பமானது. யாரும் தாமாகவே படையில் சேர முன்வரவில்லை. அவனது மந்திரி பரிவாரங்களும் படைக்கு ஆட்களைச் சேர்க்க ஆக்கபூர்வ ஆலோசனைகளை வழங்கவில்லை. இதனால் மன்னன் கிளாடி மனச்சோர்வுக்கும் எரிச்சலுக்கும் உள்ளானான்.

ஒரு நள்ளிரவில் அவனுக்கு விபரீத யோசனை ஒன்று தோன்றியது. எவருடனும் கலந்தாலோசிக்காது அதனை நடைமுறைப்படுத்த அவன் எண்ணினான். திருமணமானவர்கள் தங்கள் அன்பு மனைவியை விட்டகல மனமில்லாமலும், திருமணமாகாதவர்கள் தம் காதலியை விட்டுப்பிரிய மனமில்லாமலும் இருப்பதாலேயே இராணுவத்தில் சேர தயங்குகின்றனர். இதனை அறுத்தெறிந்தால் அனைவரும் இராணுவத்தில் சேருவார்கள் என்பதே அவனது சிந்தனை. அதனால் தனக்கு வெற்றி கிடைக்குமென நினைத்தான்.

"ரோமாபுரியில் இனி யாருமே திருமணம் செய்யக்கூடாது. ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் ரத்துச்செய்யப்பட வேண்டும். இந்த அரச கட்டளையை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் கைதாகி இருட்டுச் சிறையில் அடைக்கப்படுவதோடு பொது இடத்தில் வைத்துக் கல்லால் அடிக்கப்பட்டு தலையும் துண்டிக்கப்படுவார்கள்" என்ற அரசனின் அறிவிப்பு ஒரு நாள் வெளிவந்தது. மக்கள் அதிர்ச்சியடைந்தனர். ரோமாபுரி சோகத்தில் ஆழ்ந்தது.

அரசனின் முடிவு அநியாயமானது என்று கூறிக் கொதித்தெழுந்த கிறிஸ்தவ பாதிரியார் வலன்ரைன், அரச கட்டளையை மீறி பலருக்கு இரகசிய திருமணம் செய்து வைத்தார். செய்தியறிந்த அரசன் அவரைக் கைது செய்து இருட்டறையில் தள்ளினான். அவ்வேளை, சிறைக்காவல் தலைவனின் மகளான கண் தெரியாத அஸ்டோரியசுக்கும் பாதிரியாருக்குமிடையில் காதல் மலர்ந்தது. ஆனாலும் மரண தண்டனையில் மாற்றம் வரவில்லை.

(30ஆம் பக்கம் வருக)

போதாது என்கிறார்கள். ஆனால் கல்வி அமைச்சு பெற்றோர் ஆசிரியர்களுக்கிடையேயுள்ள சந்திப்புகள் தான் முக்கியம் என்றும் நவம்பர் மாதத்திலேயே பெற்றோர் ஆசிரியரோடு சந்தித்து தமது பிள்ளையின் குறைபாடுகளை அறிதல் வேண்டும் என்கிறது. சில பெற்றோர்களுக்கு இதன் முக்கியத்துவம் விளங்குவதில்லை.

பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் இடையே எப்பொழுதும் நெருங்கிய தொடர்பு (Communication) இருத்தல் வேண்டும். கல்வியாண்டு ஆரம்பத்திலேயே இதனை ஆரம்பித்தல் வேண்டும்.

Joan Hamilton என்னும் அதிபர் கற்றல் திறன்களே (Learning skills) கற்றலின் அத்திவாரம் என்றும் அதனால் இப் புதிய முயற்சி வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும் என்கிறார். கனடாவின் பல பாகங்களில் இன்றும் 3 தேர்ச்சி அறிக்கைகளே வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் எல்லா இடங்களிலும் இப்பொழுது கற்றல் திறன்கள் மேலதிகமாகச் சேர்ப்பதில் முயற்சிகள் எடுக்கப்பட்டதாக Mary-Law-Donnelly-President of the Canadian Teachers Federation கூறுகிறார். இவர் பெற்றோர் ஆசிரியர்களிடம் பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவலாம் என அறிதல் வேண்டுமென்கிறார்.

புலம்பெயர்ந்த பெற்றோர் எப்பொழுதும் புள்ளிகளையே விரும்புகிறார்கள் என்றும், அதுவே அவர்களுக்கு அதிக விளக்கத்தை அளிப்பதாகவும் கூறுகிறார். உதாரணமாக - மாணவன் நாளாந்தம் வாசிக்க வேண்டும் என்பதற்கும் - மாணவன் நாளாந்தம் 20 நிமிடங்கள் வாசிக்க வேண்டும் என்பதற்கும் இடையே பாரிய வேறுபாட்டை பெற்றோர் உணருகிறார்கள்.

Doretta Wilson of the Society for Quality Education – குறிப்புகளில் மேலும் திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இப் புதிய முன்னேற்ற அறிக்கை முன்னேற்றப் பாதையில் ஒரு புதிய முயற்சி. இதன் வெற்றி தோல்வியை காலமே நிர்ணயிக்கும். பாடசாலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கமைய விளக்கத்தோடு நடத்தல் பெற்றோரின் கடமை. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு இது இன்றியமையாதது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இலவச விமான டிக்கட்

சிலவேளை அதிர்ஷ்டம் ஓர் இஞ்ச் கிட்டவந்து தவறிப்போய் விடுகிறது.

சரியாக இன்று காலை ஆறுமணிக்கு தொலைபேசி வந்தது. அதன் மணிச்சத்தம் சிறிய இடைவெளிவிட்டு அவசர அவசரமாக அழைத்தது.

உள்நாட்டு டெலிபோன் என்றால் நீண்ட இடைவெளி இருக்கும். இது வெளிநாட்டு அழைப்பு.

ஹலோ என்றேன்.

மறுபக்கம் ஹலோ சொல்லவில்லை. முன்கூட்டியே தயாரித்த ஒரு பேச்சை வெள்ளைக்காரப் பெண்குரல் ஒன்று வேகமாகப் பேசியது.

"தயவுசெய்து நிறுத்துங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்?"

"நான் ஸ்டோன்புரூக் பல்கலைக் கழகத்தில் இருந்து பேசுகிறேன். புள்ளிவிவரம் சேகரிப்பதற்காக உங்களிடம் பேச விருப்பம் கொண்டுள்ளேன். உங்களிடம் பத்து நிமிடம் அவகாசம் இருக்கிறதா?'

"நிறைய இருக்கிறது."

"நல்லது. உங்கள் சுகாதாரம், உணவுப் பழக்க வழக்கங்கள், தேகப்பயிற்சி போன்றவற்றில் கேள்விகள் கேட்கப்படும். சில இடங்களில் உங்கள் அபிப்பிராயத்தையும் கேட்டு எழுதிக்கொள்வோம்."

"பிரச்சினை இல்லை. ஆனால் இதனால் எனக்கு என்ன பிரயோசனம்? "

"மன்னியுங்கள், அதைத்தான் சொல்ல வருகிறேன். 2000 பேரிடம் இந்த புள்ளிவிவரங்களை சேகரிக்கிறோம். அவர்கள் கருத்துக்களையும் கேட்போம். புள்ளிவிவர சேகரிப்பு முற்றுப்பெற்றபின் இதில் பங்குபற்றியவர்களுக்கு குலுக்கல் முறையில் ஒரு பரிசு உண்டு."

"அப்படியா? நல்லது, என்ன பரிசு?"

"ஸ்பெயின் நாட்டுக்கு போய்வர இலவச விமானப் பயணம். ரொறன்ரோ - மாட்ரிட் - ரொறன்ரோ டிக்கட் உங்கள் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். "

'எனக்கு மாட்ரிட்டில் ஒரு சொந்தக்காரரும் இல்லை. இதை ஜேர்மனிக்கு மாற்ற முடியாதா? "

'தெரியவில்லை. குலுக்கல் முறையில் வென்ற பிறகுதான் டிக்கட் அனுப்பிவைக்கமுடியும். "

'உங்களுக்கு சம்மதம் என்றால் ஆரம்பிக்கலாமா? "

'ஆரம்பிக்கலாம். "

உங்கள் பெயர். சொன்னேன்.

என்னுடைய முகவரி, தொலைபேசி எண் எல்லாவற்றையும் எழுதிக்கொண்டார். அடுத்து ஆணா, பெண்ணா என்ற கேள்வி. அதற்கும் பதில் சொன்னேன்.

'நீங்கள் 18 வயதுக்கு கூடியவரா? " ஆம் என்று சொன்னேன்.

'உங்கள் வயது என்ன? " சொன்னேன். மறுபக்கத்தில் ஒரு சத்தமும் கிடையாது.

'ஐயா, தொந்தரவுக்கு மன்னிக்கவும். உங்கள் வயது நாங்கள் விதித்திருக்கும் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. நீங்கள் கொடுக்கும் புள்ளிவிவரங்களை நாங்கள் சேர்க்க முடியாது."

'எனக்கு வயது கூடியதாலா?"

'அப்படித்தான் எங்களுக்கு கட்டளை."

'என் அபிப்பிராயத்தையாவது சேர்க்க முடியுமா?"

'பிரயோசனமான அபிப்பிராயம் சொல்லும் வயதை நீங்கள் கடந்து விட்டீர்கள்."

உணவுக்கான கடவுள் ஒரு சமயத்திலும் இல்லை. ஒரு புனிதர் இல்லை. ஐ.நா தூதுவர்கூட இல்லை. இது பற்றிய அபிப்பிராயத்தை நான் சொல்வதாக தீர்மானித்திருந்தேன். அந்த வாய்ப்பே எனக்கு மறுக்கப்பட்டுவிட்டது.

'இலவச விமான டிக்கட் இல்லையா?"

மறுபக்கம் டெலிபோன் வைக்கும் சத்தம் கேட்டது.

ஸ்டோன்புரூக் பல்கலைக்கழகமே சொல்லிவிட்டது என்னுடைய அபிப்பிராயம் உதவாது என்று. இன்றுவரை என்னிடம் சேகரமாயிருக்கும் அபிப்பிராயங்களை வைத்து இனிமேல் நான் என்ன செய்வது என்பதுதான் இப்போதைய யோசனை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# ரௌத்திரம் பழகு

பாரதியார் இலேசாக இதனை சொல்லிச் சென்றுவிட்டார். ஔவையாரும் ஆறுவது சினம் என்று சாவகாசமாகவே கூறி மறைந்து விட்டார். ஆத்திரம் கண்ணை மூடிடும் பொழுது அறிவுக்கு வேலை கொடு என்று தன் புத்தியை காட்டினார் கண்ணதாசன்.

நம்மிலும் வலிமை குறைந்தோரிடம் கோபம் வரும் பொழுது ஆறுவது சினம் என ஆத்திசூடி இயற்றும் பொழுது ஔவையாரும் சண்டியர்கள் சண்டித்தனம் செய்யும் பொழுது ரௌத்திரம் பழகு என புதிய ஆத்திசூடி இயற்றும் வேளையில் பாரதியாரும் நினைத்திருப்பார்களோ?

அல்லது இப்பொழுது பழகு. எப்பொழுதும் பயன்படுத்தாதே என பாரதியாரும் ஆறப்போடு. சூடு குறையும். ஆனால் சுவை குறையாது என ஔவையாரும் கருதியிருப்பார்களோ?

மேலை நாடுகளில் ரௌத்திரம் பழகும் தமிழர் தாம் பாரதியாரின் அபிமானிகள் என்று கூறி தப்பி விடவும் முடியாது. குடும்பத்தில் என்றாலும் சரி வேலை செய்யுமிடங்களில் என்றாலும் சரி சிறு விடயங்களுக்குக் கூட இங்கு எவருமே ரௌத்திரம் பழகி விடவும் முடியாது.

ஆத்திரம் ஆவேசமாகக் கிளம்பும் நேரங்களில் அனேகமாக அறிவு பயந்து பதுங்கிவிடும். சிந்திக்கும் ஆற்றல் சிதைந்து விடும். அன்பு அணைந்து விடும். சொற்களில் பகை பிறக்கும். தன்னிலை இழக்கும். மதிப்பு கெடும். மாரடைப்பு, இரத்த அழுத்தம், இருதய படபடப்பு, நரம்புத்தளர்ச்சி போன்ற பல வரும்.

கோபத்தால் சிந்தனை மழுங்கடிக்கப்பட்டு செயற்திறன் தடுமாறி கோமாளி ஆனோர் பலர். அதனால்தான் கோபம் நம்மை அழிக்க முன்பு நாம் அதனை அழித்திடவேண்டும் என்பார்கள்.

ஆத்திரத்தின் அடிப்படையில் நீதிமன்றம் புகுவோர் அதனை அடக்குவதற்கு இருமாதம் பயின்று சான்றிதழ் பெறுமாறு பொறுமையுடன் எச்சரிக்கப்படுவர்.

எமக்கெதிரே ஆவேசத்துடனிருப்பவரின் பாதிப்புக்கு ஆளாகாமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சின்னச்சின்னதாக ஆறு அம்சங்களை கருத்தில் கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது.

முதலாவது, எமது கண்களை மூடக்கூடாது. இதனால் எம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அறிவதுடன் அடுத்து என்ன நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்பதையும் உடனடியாகவே தீர்மானிக்கலாம். பலர் பயத்தால் கண்களை மூடுவதால் அவதான சக்தியை இழந்து அல்லலுறுவர்.

அடுத்ததாக, அவதானிக்கப்பட வேண்டியது கைகள். கோபக்காரனின் கையில் உள்ள எவையுமே கொலைக் கருவிகளாக மாறலாம் என்பதை மறக்கக்கூடாது.

மூன்றாவது, வாக்குவாதங்களை குறிப்பாக விதண்டாவாதங்களைத் தவிர்த்தல் வேண்டும். அறிவிழந்து குதிப்பவர் முன்பாக நாமும் குதிப்பதில் அர்த்தமில்லை.

நான்காவது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சமயோசிதமாக நடத்தலாகும். விட்டுக்கொடுத்தல்கூட சில வேளைகளில் நன்மை பயக்கும். எக் காரணம் கொண்டும் பதற்றப்படக் கூடாது.

கோபக்காரனுக்கு முன்பாக அவனுக்கு எதிர்த் திசையை பார்த்தபடி நிற்பதை தவிர்த்தல் முக்கியம். ஏனெனில், உங்களுக்குப் பின்னால் அவன் என்ன செய்வான் என்பதை அனுமானிக்க முடியாது.

அல்லது எதிராளியின் கவனம் நிலை குலையும் வண்ணம் எதனையாவது செய்யுங்கள். கத்துங்கள். மிரட்டுங்கள். விரட்டுங்கள். அல்லது அகலுங்கள்.

இவை எல்லாம் தெரிந்தவைதானே என்று கோபம் மூர்க்கமடைகின்றதா? கனடாவிற்கு தேவை விதிகள். விரோதிகள் அல்ல! ●

## ரொறன்ரோவில் கடந்தாண்டில் அறுபது கொலைகள்

2010ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் கிறிஸ்மஸ் தினமான டிசம்பர் 25 வரையான காலத்தில் ரொறன்ரோ நகரப் பகுதியில் 60 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் கணிசமானவர்கள் இளையோர்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுமார் இருபது கொலைகளில் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது. டவுன் ரவுணிலுள்ள ரீஜன்ட்பார்க் பகுதியில் அடுத்தடுத்து பல கொலைச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ரொறன்ரோவில் 2009ஆம் ஆண்டில் 61 கொலைகள் இடம்பெற்றன.

## பெல் கனடா நிறுவனத்துக்கு 1.3 மில்லியன் அபராதம்

'அழைக்கப்படக் கூடாதவர்கள்' (Do not call listyt) என்ற பட்டியலில் உள்ள தொலைபேசி வாடிக்கையாளர்களை வர்த்தக நோக்கத்துக்காக அழைத்த குற்றத்துக்காக பெல் கனடா நிறுவனத்துக்கு 1.3 மில்லியன் டாலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பெல் கனடாவின் தொலைபேசி, தொலைக்காட்சி, செல் தொலைபேசி ஆகியவற்றுக்கு வர்த்தகம் செய்வதற்கு அவர்களால் நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு 'ரெலி மார்க்கட்டிங்' நிறுவனத்தினர் விதிகளை மீறியதால். பெல் கனடா அபராதத்துக்கு ஆளானது.

## புதிய குடிவரவாளர்களின் குறைந்த வருமானத்துக்கு இனப்பாகுபாடு காரணம்?

கனடாவில் புதிய குடிவரவளர்கள் குறைந்த வருமானம் பெறுவதற்கு இனப்பாகுபாடு காரணமாகுமென மக்மாஸ்டர் பல்கலைக் கழக ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். கனடாவில் பிறந்தவர்களைவிட குடிவரவாளர்களின் வருமானம் குறைவாகவிருப்பதற்கு அவர்கள் நிறம், மொழி மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் காரணமென்று இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு கல்வித் தராதரம், வேலை அனுபவம் ஆகியவற்றை கனடிய வேலை வழங்குனர் சந்தேகமாகப் பார்க்கின்றனர் என்று இதற்கான அறிக்கையைத் தயாரித்த ஆய்வாளர் ஆர்தர் சுஸீற்மன் தெரிவித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைப்பதால் வாழ்நாளில் 10 ஆண்டுகள் இழப்பு

புகைபிடிப்பதால் தனது வாழ்நாளில் 10 ஆண்டுகள் வரை புகைப் பழக்கம் கொண்டவர்கள் இழக்கக் கூடும் என்ற அதிர்ச்சி அளிக்கும் தகவல், அண்மையில் பிரிட்டனில் நடைபெற்ற ஆய்வு ஒன்றின் முடிவில் தெரிய வந்துள்ளது. புகைப் பழக்கத்தோடு பிற உடல்நலக்கேடான பழக்கங்களும் இருந்தால் 15 ஆண்டுகள் வரை வாழ்நாள் இழப்பு ஏற்படும் என்றும் அதில் தெரிய வந்துள்ளது.

குறிப்பாக 35 வயதைத் தாண்டியவர்கள் புகைப் பிடிக்கும் பழக்க வழக்கத்தைத் தொடர்ந்தால் கேடு பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக அந்த ஆய்வு கூறுகிறது.

புகைப்பழக்கம் இதயத்தின் தமனிகளில் அடைப்பு ஏற்படுவதை விரைவாக்குகிறது என்றும், அதிக கொலஸ்ட்ரால் உள்ள உணவுகளை உட்கொள்வதாலும், சோம்பிய வாழ்க்கைப் பழக்கத்தாலும் மாரடைப்பு ஏற்படுவது விரைவுபடுத்தப்படுவதாகத் தெரிகிறது. புகைப்பழக்கத்தை நிறுத்தியவர்கள் தமனி அடைப்புகள் நீங்கி வாழ்நாள் அதிகரிக்கும் வாய்ப்புகள் உருவாவதாகவும் அந்த ஆய்வில் தெரியவந்தது.

இந்த ஆய்வு குறித்த கருத்து தெரிவித்த புகைபிடிப்பவர் ஒருவர் "புகைக்காமல் வாழ்பவர்கள் அனைவரும் நீண்ட நாள் வாழ்கிறார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை" எனத் தெரிவித்தார்.

## அசைவ உணவை தவிர்த்தால் வாழ்நாளை அதிகரிக்கலாம்

அசைவ உணவைத் தவிர்த்தால் வாழ்நாளை அதிகரிக்கலாம் என்று புதிய ஆய்வு ஒன்றில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், மக்களின் உணவு மற்றும் சுகாதாரம் குறித்து மேற்கொண்ட ஆய்விலேயே இந்த புதிய தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆய்வின் படி வாரத்தில் மூன்று முறைக்கு மேல் அசைவ உணவை தவிர்த்த, சுமார் 45 ஆயிரம் பேர் தங்களது வாழ் நாளை அதிகரித்துக் கொண்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் குறைவான அசைவ உணவை உட்கொள்வதன் மூலம் ஒவ்வொரு வருடமும் சுமார் 31 ஆயிரம் பேர் இதய நோய்களில் இருந்து விடுபடுவதாக தெரிகிறது.



பொன்னையா விவேகானந்தன்

# உயிர் பிரியும் பகல் 11

பூமியின் ஒரு பகுதிக்கான தன் பணியை நிறைவு செய்தபடி, மேற்கின் அடிவான ஆழத்திற்குள் மறைந்து கொள்கின்றான் கதிரவன். வளைவான சிறகுகளை உடைய பறவைகள் வீடுகள் தேடி விரைவாகப் பறந்து செல்கின்றன. ஓங்கி வளர்ந்த மரங்களில் தாயின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குஞ்சுகளுக்கான இரைகளை இவை எடுத்துக்கொண்டு பறக்கின்றன. குஞ்சுகளின் காத்திருப்பே பறவைகளின் இந்த வேகப் பறப்பிற்குக் காரணம்.

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறியயல் மரா அத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண்டமையின் விரையுமால் செலவே.

சங்கப் புலவன் ஒருவன் தான் உணர்ந்து மகிழ்ந்த ஒரு மாலைக்காட்சியை ஓவியமாகத் தீட்டியிருக்கின்றான் என நாம் கருதினால், நாம் அந்தப் புலவனின் ஆற்றலை குறைத்து மதிப்பிடுகின்றோம் என்றுதான் பொருளாகும்.

புலவனின் புறக்கண்கள் எடுத்துரைத்த இந்தக் காட்சியை, அதே புலவனின் அகவுணர்வு கொண்டு ஆராய்ந்தால் உண்மை புலப்பட்டுவிடும்.

மணமாகி சிறிது காலம் மட்டுமே ஆகியிருந்தது. தனியாகக் குடித்தனம் நடத்தி வருகின்றனர். அவனுக்கு அவள் துணை. அவளுக்கு அவன் மட்டுமே துணை. எப்போதுமே இணைந்திருத்தல் வெல்லத்தை வெல்லும் இனிமைதான். ஆயினும் வாழ வருவாய் வேண்டுமே. வினை ஆடவர்க்கு உயிராயிற்றே.

'நான் தொழில் முடித்து மாலைக்குள் வருவேன் கண்ணே காத்திரு" என்கின்றான். பகற்பொழுதில் உயிர் உடலைப் பிரியப்போகிறதே... பதைபதைக்கிறாள். ஆயினும் வேறு வழியில்லை. கூடவே கூடியிருந்தால் குடிக்கக் கூழும் அற்றுப் போகுமே. கணவனைப் பணிக்கு அனுப்பியாக வேண்டும்.

விடை கொடுக்கின்றாள்.

சூரியனைச் சுடும் அளவுக்கு வெற்றுடல் தகிக்கிறது. பகல் மயங்கி மாலை மிளிர்கின்றது. அந்திச் சிவப்பாக அறிவிழந்து கிடக்கிறது உடல். கணவன் வரும் வழி பார்த்து துவண்டு கிடக்கிறது உணர்வு.

அவளது பாதி விழிகளில் இரை கொண்டோடும் பறவைகள் தெரிகின்றன.

வருவேன் என்றவன் வரக் காணோமே...

மாலையாகிவிட்டது. மனிதர்கள் மட்டுமல்ல, பறவைகள் விலங்குகள் என உயிரினங்கள் எல்லாம் வீடும் கூடும் தேடிப்போகின்ற பொழுது. கூட்டில் காத்திருக்கும் குஞ்சுகளுக்கான உணவையும் தீரா அன்பையும் சுமந்தபடி, பறவைகள் கடுகிப் பறக்கின்றனவே. எல்லாமும் தத்தம் இருப்பிடம் ஏக, நான் மட்டும் தனித்துக் கிடக்கின்றேன். என்னை நினைத்து விரைந்து வர வேண்டிய காதலர் மறந்து விட்டாரே!

தலைவன் வரவை எதிர்பார்த்துத் தவித்திருக்கும் காதல் தலைவியின் உணர்வே இந்தச் சொல்லோவியம்.

சொல்ல வந்த கருப்பொருளை உள்வைத்து, மாலைக்காட்சி ஒன்றின் வாயிலாக, அதை உணரச் செய்கின்ற உயர்புலமையின் வெளிப்பாடு இச் செய்யுள்.

உணர்ச்சிகள் உள்ளத்தை நிறைத்துவிட்டால், வார்த்தைகள் வெளிப்படுவது தடைப்பட்டுவிடும்.

'பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண்டமையின் விரையுமால் செலவே."
என்ற வரிகள் மட்டுமே காத்திருப்பின் துயரத்தைப் போதியமட்டும் எடுத்துரைத்து விடுகின்றன. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## கப்பம் பெறுவதில் இது ஒரு தனி ரகம்!

படப்பிடிப்பு நிலையமொன்று (ஸ்ரூடியோ) இரவு வேளையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டன. பொலிசில் முறையிட்டும் பலனில்லை.

சில தினங்களில் உரிமையாளரின் கைத்தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. நான்கு லட்சம் ரூபா கப்பம் கேட்டு அவர் மிரட்டப்பட்டார்.

எதற்காக இந்தக் கப்பம் தெரியுமா? களவாடப்பட்ட படப்பிடிப்பு உபரகணங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு. ஐம்பதுக்கு ஐம்பது கமிஷன் அடிப்படையிலான புதிய ரகக் கப்பம் இது.

இது எங்கு நடந்தது தெரியுமா? வடதமிழீழத்தின் பருத்தித்துறையிலுள்ள முதலாம் கட்டைப் பகுதியில்.

## வைரமுத்தரின் ஆலவட்டம் மேடையை அசிங்கமாக்கியது

'ஆண்பாவம்' திரைப்பட வெள்ளி விழா ஆண்டு நிகழ்வு சென்னையில் நடந்தது. மேடையில் நடிகர் பாண்டியராஜின் கையைப் பிடித்து முத்தமிட்ட நடிகர் கரண், " இது எம்.ஜி.ஆர். முத்தமிட்ட கை, அதுதான் முத்தமிட்டேன்" என்றார்.

இதைக் கவனித்த கருணாநிதி தாசரான கவிஞர் வைரமுத்து பொறுக்க முடியாத நிலையில், எம் ஜி. ஆர் தொட்ட ஒரு நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு கீழ்த்தரமாகப் பேசினார்.

அடுத்துப் பேசிய கவிஞர் காசிமுத்து மாணிக்கம், வைரமுத்தரைக் கிழித்து உதற சபையில் பலத்த கைதட்டல். சங்கர் கணேஷ் ஓடோடிச் சென்று மாணிக்கத்தைக் கட்டித் தழுவினார்!

## பாதரசப் பாவனையால் பறவைகள் தன்னின...

பாதரசம் அருந்தும் ஆண் பறவைகள் தன்னினச் சேர்க்கைக்கு மாறி வருவதை அமெரிக்க புளோரிடா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இங்குள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் பாதரசத்தை அருந்திய 'இபிசெஸ்' என்னும் வெள்ளை நிறமுறைடய ஆண் பறவைகளிடமே இந்தப் பரீட்சார்த்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. இவ்வினத்தைச் சேர்ந்த சுமார் 160 பறவைகள் இந்தச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாறான தன்னினப் புணர்வினால் இந்தப் பறவை இனத்தின் பெருக்கம் குறைந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதே மாதிரியான சோதனைகளை இங்குள்ள பாலூட்டிகளின் மீதும் (விலங்குகள்) நடத்துவதற்கு புளோரிடா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் ஆயத்தமாகின்றனர்.

## ராசாவுக்கு ராசாத்தியம்மா; கஸ்பருக்கு ஒரு கனிமொழி!

அறிஞர் அண்ணாவின் 'எதையும் தாங்கும் இதயம் நான்தான்' என்று தமக்குத் தாமே புகழாரம் சூட்டி வந்த கருணாநிதி, ராசாவால் இன்று இடிந்து போயுள்ளார். அடிக்கடி அமைதி நாடி வீட்டை விட்டு ஓடிச் செல்கிறாராம்.

"என்னைச் சுற்றியிருந்த எல்லோருமே என்னை ஏமாற்றி விட்டார்கள்" என்று வாய்விட்டுப் புலம்புகிறார். பாவம்! மூன்றாவது மனைவி இப்படிச் செய்வாரென்று நினைக்கவில்லையாம்!

"எனக்கு கோபாலபுரம் வீட்டைத் தவிர வேறு சொத்துகள் இல்லை" என்று தாமாகவே முன்வந்து வெளியிட்டவர், மனைவிமாரின் சொத்து விபரங்களை வெளியிடாதது ஏன் என்று கேட்க ஆரம்பித்துள்ளனர் உடன்பிறப்புகள்.

ஜெகத் கஸ்பர் (அடிகள்) கனிமொழி தொடர்பான 'சங்கமம்' பற்றியும் ஆழமான விசாரணை ஆரம்பம். இது எங்கு போய் முடியுமோ தெரியாது என்று கருணாநிதி அங்கலாய்க்கிறார்.

**உதாசனன்**
**உலா விருந்து**

## கலாநிதிப் பட்டங்கள் இப்போது மலிவு விலையில்!

பல்கலைக் கழகமில்லாத சில சங்கங்கள் பல்கலைக் கழகப் பெயரில் கலாநிதிப் பட்டங்களை விற்பனை செய்த சமாசாரம் பலருக்கும் தெரியும். இங்கும் பலர் பெற்றுள்ளனர்.

அப்போது சுமார் 370 அமெரிக்க டாலருக்கு விற்பனையான இந்தப் பட்டங்கள் இப்போது மலிவு விலைக்கு வந்துள்ளன. இதற்கான கடிதங்கள் கனடாவிலுள்ள தமிழர்களை இலக்கு வைத்தே அனுப்பப்படுகின்றது.

இப்போது இதன் விலை 200 டாலர்கள் மட்டுமே! விண்ணப்பிப்போர் தொகை எக்கச்சக்கம் என்கிறார் ஒரு கலைஞர்.

"போனால் வராது (மலிவு விலையில்); பொழுதுபட்டால் கிடையாது" என்று கூவிக்கூவி விற்பனை நடைபெறுகிறது.

## பிக்குகளுக்கு ஏற்பட்டுள்ள தொற்று நோய் இது!

பாலியல் வல்லுறவு, மதுபோதை, கலாட்டா போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் பௌத்த பிக்குகள் தொகை இலங்கையில் அதிகரித்துச் செல்கிறது.

புத்தளம் தபோவா சிறீவித்யாராம விகாரை பிரதம பிக்குவின் புகாரில், மது மயக்கத்தில் நிர்வாண நிலையில் குழந்தைப் பிக்கு ஒருவருடன் பாலியல் முயற்சியில் ஈடுபட முயற்சித்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதே செயற்பாடுகளில் பிரதம பிக்கு சில வருடங்களின் முன்னர் தம்முடன் ஈடுபட்டதாக கைதான பிக்கு பொலிசிடம் தெரிவித்துள்ளதுதான் இதிலுள்ள வேடிக்கை.

## தெற்காசிய அரசியலில் தேங்காயும் வெங்காயமும்

இந்தியாவில் வெங்காயத் தட்டுப்பாடு; இலங்கையில் தேங்காய்த் தட்டுப்பாடு; இறக்குமதி முயற்சியில் இரு நாடுகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இதற்கும் விடுதலைப் புலிகளைத்தான் காரணம் என்று இருநாட்டு புலனாய்வுத் துறையினரும் இதுவரை ஏனோ அறிவிக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம்

# பட்டி தொட்டிகளில் கிட்டு புகழ்!

ஏழை கோழைக ளாகத் தமிழ்க்குலம்
இருந்து வந்திட வேண்டும்! அப்பேதைகள்
தோளில் ஏறி,உல் லாசமாய்ச் சிங்களர்
சோம்பி உண்டு கிடந்திட வேண்டும்!இக்
கூளையர் சதிக் குள்ளத் தனத்துடன்
கொஞ்சிக் கொஞ்சியே நஞ்சினைப் பாய்ச்சிய
ஆள வந்தவர் அடிமனச் சூழ்ச்சியை
அறிந்து கொண்டதந் நாளே தமிழினம்!

நெல்,க டல்வளம், உப்பெனச் செல்வங்கள்
நிறைந்த நம்தமிழ் மண்ணைக் கவர்ந்திட
மெல்லச் சிங்களப் புதுக்குடி யேற்றங்கள்
மேற்கொண் டேவிழுங் கிட்டார் தமிழ்நிலம்!
கல்வி மேன்மை கதித்த தமிழர்நம்
காலை வாரத் தரப்படுத் தல்செய்தார்!
கல்மனத்துடன் மலைத்தமி ழர்களை
கப்ப லேற்றிநம் ஆட்தொகை தேய்த்தனர்!

கழுத்த றுக்கும்இக் கயவர்தம் சூழ்ச்சியைக்
கண்டு கொண்டு கனன்ற தமிழ்க்குலம்
எழுச்சி கொண்டது! சாத்வீகமாக, முன்
னெடுத்து நின்றதெம் உரிமைப்போ ராட்டத்தை!
'விழித்தெ ழுந்துவிட் டான்தமி ழன்!இனி
மிரட்டல் மூலம் அடக்குவோம்! மீறிடின்
அழித்த டக்குவம் ஆயுதத்தால்' என்று
அடித்து வெட்டி மிதித்தழித் தாரெமை!

அச்சு றுத்தலுக் கஞ்சிக் கிடக்கவோ?
அடிமை செய்தழிந் துக்கி முடியவோ?
எச்சில், கந்தை,பின் கோடியாய் வாழவோ?
ஈழம் எந்தமிழ் இல்லையென் றாகவோர்
இச்சினங் கனன்றோங்கிட நெஞ்சினில்
எழுந்த தோரிளந் தலைமுறை! வாழ்வையே
துச்ச மாக மதித்தெழுந் திட்டதோர்
சூரியன்-பிர பாகரச் சூரியன்!

சுட்டெ ரித்திடத் துட்டத் தனம்,எழும்
தூயன் 'தம்பி'யின் வலதுகை யாகவே
கிட்டு என்றொரு தீரன் இணைந்தனன்!
கீழை வானெழும் விடிவெள்ளி தான்அவன்!
திட்டம் தீட்டிப்போர்ப் பயிற்சிகள் மேற்கொண்டு
தீரமான கரந்தடி கள்மூலம்
கொட்ட மிட்டலை கொலைவெறி யர்களைக்
கொன்று, கொன்று குவித்த திவர்அணி!

சுற்றுக் காவலாம் பேரில்,ஊர் வீதிகள்
தொல்லை தந்துநிட் டூரங்கள் செய்தவர்
வெற்றி வீரன்நம் கிட்டுவின் தீரத்தால்
வெலவெல த்தனர்! மடக்கஇவ் வீரரை,
முற்று கைகளில் சுற்றி வளைப்பினில்
முற்பட் டூர்களில் வேட்டைமேற் கொண்டவர்
பெற்றனர் நெருப் படிகள்!பின் வாங்கியே
பெருமு காம்களில் முடங்கிக் கிடந்தனர்!

முடக்கி வைத்துப் படையை முகாம்களில்
மூர்க்கம், மும்முர மாய்த்தமிழ் ஊர்களில்
நடத்தி னன்கிட்டு பரப்புரை கள்பல!
நாளை நம்தமிழ் ஈழம் மலர்ந்திட
அடித்த ளம்இடும் அப்பணி யாகவே
அணிதி ரட்டினன் அரும்புலி வீரரை!
தொடக்கி னன்தொழில் பற்பல மக்களுள்!
சுதந்தி ரப்பசி தோன்றிடச் செய்தனன்!

முப்ப தாண்டின்முன் கரந்தடிக் கூட்டமாய்
முகிழ்ந்த வேங்கை கடல்,தரை வான்எனும்
முப்படை களாய் முழுமையைப் பெற்றதால்
முனைகள் நேரடி மோதல்கள் வென்றனன்!
இப்பெ ரும்படைத் துறைவளர்ச் சிகட்கும்
இட்டவன் தளம் தளபதி கிட்டுவே!
எப்ப கைவனோ காலொன்றை வாங்கியும்
இடைவி டாமற்போர்க் களங்களில் வென்றவன்!

பட்டி தொட்டிகள் எங்கணும் ஈழத்தில்
பரவப் பட்டனன் கிட்டு! சிறுவர்கள்
கிட்டு மாமாவென் றோடித்தோள் ஏறினர்!
கிளர்ந்து வேங்கைகள் 'கிட்டுஅண் ணா'என்று
முட்டும் வாஞ்சையால் மொய்த்தனர்! கற்றோரும்
முதன்மை தந்து மதித்தனர்! விடுதலை
சுட்டும் 'எரிமலை', 'களத்தில்'போல் ஏடுகள்
தோன்ற வைத்தனன் லண்டன், பரீஸிலே!

ஆதிக் குடிகள்இவ் வீழத்தில் நாமென்றும்
ஆண்டனர் தமிழ் மன்னர்இம் மண்ணென்றும்
பாதி மட்டினில் இன்றெங்கள் சொத்தென்றும்,
பகரும் சான்று சரித்திரம் தள்ளியே
பாதகக் கொலை பேரினம் மேற்கொள்ளல்
பற்பல வெளி நாட்டில் பரப்பிட
ஏது வாக,இ லண்டனில் தங்கியே
ஈழ மீள்வினுக் காதரவீட் டினான்!

உலக நாடுகள் ஒத்துழைப் போடிங்கு
யுத்தம் விட்டமை திப்பேச்சு மூலமே
நிலைத்த தீர்வு நிகழ்விக்கும் ஏற்பாட்டில்
நேய வேங்கைகள் ஒன்பது பேருடன்
அலைகடல் மீதில் கப்பலி லேகிட்டு
அன்னை மண்நோக்கிப் பயணித்த, வேளையில்
வலைவி ரித்தநஞ் சிந்தியச் சூழ்ச்சியால்
மாய்த்துக் கொண்டனன் தன்னைத்தா னேகிட்டு!

என்ன சூழ்ச்சிகள் எதிரிகள் செய்யினும்
எங்கள் ஆயுத ஆற்றல் நொறுக்கினும்,
இன்னும் வீறாய்ப்பல் நாட்டி லிருந்துமே
ஈழத் தாயகம் மீட்டிடல் ஒன்றையே
உன்னதக் குறியாய்க் கொண்டு ழைக்கிறோம்!
உத்த மன்கிட்டு போலப்பல் லாயிரம்
அன்னை தேசப் பிதாக்கள்மா வீரரின்
ஆன்ம லட்சிய ஈழம்மீட் டேத்துவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# தசாவதாரமும் கூர்ப்புக் கொள்கையும்

திருமாலை முதற்கடவுளாகக் கொண்ட வைணவ சமயமானது பத்து அவதாரங்களைத் தம் இறைவனின் திருவிளையாடல்களாக எடுத்துக் கூறும். அவையாவன மச்ச அவதாரம் கூர்ம அவதாரம் வாரக அவதாரம் நரசிங்க அவதாரம் வாமண அவதாரம் பரசுராம அவதாரம் பலராம அவதாரம் கிருஷ.ண அவதாரம் இராம அவதாரம் என்ற ஒன்பதுடன் கல்கி அவதாரம் என்ற இன்னும் நிகழாத அவதார தோற்றமும் இணைந்தது ஆகும்.

இந்த அவதாரங்களை உற்று நோக்கும் போது உலகின் கூர்ப்புக் கொள்கையான பரிணாம வளர்ச்சித் தத்துவத்தின் சாயலைக் காணலாம்.

உலகின் முதல் உயிர் நீர் நிலையில் தோன்றி நீரிலும் நிலத்திலும் வாழும் நிலை அடைந்து பின்பு நிலத்தில் வாழும் உயிரினமாக மாறி பின் விலங்கும் மனித நிலையும் கலந்த நிலையை அடைந்து இதன் பின்பு மனிதன் என்று ஒத்துக் கொள்ள முடியாத ஒரு விசித்திர உருவு நிலைக்கு வந்து அதன் பின்பே மனித நிலையை அடைந்திருக்கின்றது என்கிறார்கள் டார்வின் போன்ற விஞ்ஞானிகள்.

இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு தசாவதாரங்களை நோக்கினால் வியப்பு ஏற்படும். தசாவதாரத்தில் முதல் அவதாரம் மச்சம் எனப்படும் மீன். இது நீரில் தோன்றி நீரில் மட்டுமே வாழ்வது.

அடுத்து கூர்ம அவதாரம் எனப்படும் ஆமை. இது நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மை கொண்டது. இதனால் நீரில் தோன்றிய உயிர் நிலத்துக்கு தொடர்பாகிறது.

இதன்பின்பு நீருடன் தொடர்பில்லாத நிலத்தில் மட்டுமே வாழும் விலங்கான பன்றி வாரக அவதாரமாகின்றது. அதன்பின் விலங்கு ஆகிய சிங்கமும் நரனாகிய மனிதனும் கலந்த நரசிங்க அவதாரம் அமைகிறது. இது மனிதனிலும் சேராமல் முற்றாக விலங்கிலும் சேராத ஒரு அரைகுறை மாறுபாட்டோடு நின்றுவிடுகின்றது.

இதன் பின்பு குள்ள அல்லது குனிந்த மனித உருவம் வாமண அவதாரமாகக் காட்டப்படுகின்றது. இது மனித உருவம் போல தெரிகின்றது.

ஆனால் குள்ள உருவமாக பூரண வளர்ச்சி அடையாத விசித்திர உருவமாக காணப்படுகின்றது. அது மனித இனத்துக்கு ஒவ்வாத தருப்பையால் வண்டைக் குத்தும் இழிசெயல் செய்கிறது. அங்கே முழு மனிதனாத் தோற்றம் பெறும் அடுத்த நிலை கொண்டுவரப்படுகிறது.

இதன் பின்பு பரசுராம அவதாரம் வருகின்றது. பரசுராமன் தோற்றத்தில் மனிதனாக இருந்தாலும் மன உணர்விலே சினம் மிக்க மிருக உணர்வோடு மன்னர்களை வேட்டையாடும் கொடூர பாத்திரம். இரத்தம் கொலை இவற்றோடு இருபத்தொரு தலைமுறையாக ஒன்றி நடந்த பாத்திரம்.

உருவம் மனிதனாகவும் குணம் விலங்கு நிலையிலும் இருந்த ஒரு தன்மையில் இருந்து விடுபட்ட நிலை அடுத்து வருகின்றது.

அதுவே துவாரகையில் கிருஷ்ணனுக்கு அண்ணனாக பிறந்து வாழ்ந்த சுவடே தெரியாமல் சாந்தம் அன்பு நீதி போன்ற எண்ணங்களால் தெளிந்த நீரோடை போலத் திகழ்ந்த பலராமன் அவதாரம். இது முழுமை பெற்ற மனித நிலை.

முழுமையான மனிதநிலை அடைந்த பிறப்பில் இடையிடையே தெய்வத்தன்மை தலை தூக்கும் விதத்தில் கிருஷ்ண அவதாரம் அமைகிறது. வெண்ணெய் திருடி உண்ணும் மனித இயல்புக்கு மத்தியில் கீதை உபதேசிக்கும் தெய்வத் திருவிளையாடல்! மனித நிலையில் இருந்து தெய்வ நிலைக்குக்கு மாறும் உன்னத நிலை.

இதன் பின்பே இராம அவதாரம் வந்திருக்க வேண்டும். ஏனெனில் இராம அவதாரத்தில் மனிதத் தோற்றம் இருந்தாலும் மனிதச் செயற்பாடுகளை காணமுடியவில்லை. எல்லாமே மனித சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்ட தெய்வ நடைமுறைகள். அங்கே மனித விருப்பு வெறுப்புகள் புலன் உணர்வுகளை அடக்கிய செய்திகள் சினத்தை அறவே நீக்கிய தெய்வ நிலை என்று மனிதப் பிறவியைக் கடந்த ஒரு தன்மை காணப்படுகிறது.

இதனை நோக்கும் போது வரப்போகும் கல்கி அவதாரம் என்பது மனிதச் சாயல் கொண்ட இராமனை விடவும் பெறுமதியான பூரண தெய்வத் தோற்றப்பாடாகவே இருக்கும். அதிலே மனித சாயல் துளியும் கலந்து இருக்கப் போவதில்லை என்று அறுதியிட்டுக் கூறலாம்.

எனவே கல்கி என்றும் பகவான் என்றும் மானுடர்கள் தங்களை கூறிக் கொண்டு மடம் அமைத்து வாழ முடியுமே ஒழிய அந்தப் பரம் பொருளின் நிழலைக் கூட அவர்களால் மிதிக்க முடியாது என்பதே உண்மையாகும்.

இதிலே இராம அவதாரமும் கிருஷ்ண அவதாரமும் மாறுபட்டு இருந்தாலும், பலராமன் வரையாவது மனித இன வளர்ச்சிக் கொள்கையோடு இந்த அவதார வைப்புகள் இணங்கி வருவதைக் காணலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சிந்தனையும் சித்தரிப்பும் இது என்பதே தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# ரொறன்ரோவின் குரல் கனடாவின் முகம்

எப்போதும் புன்னகை தவழும் மலர்ந்த முகம், பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் உயர்ந்த தோற்றம், தவறிக்கூடத் தப்பாகத் தெறித்துவிடாத தெரிந்தெடுத்த வார்த்தைகள், இவை அனைத்திற்கும் மகுடம் வைப்பதுபோன்று, கொஞ்சம் கனத்த ஆனால் இரைச்சலற்ற தெளிவான குரல், இவற்றின் மொத்த வடிவமாக, கனடிய ஊடகத்துறையில், குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகத்தில் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக துணிச்சலுடன் பணியாற்றிய வரலாற்றுக் கதாநாயகன் திரு.மார்க் எட்வேர்ட் டெய்லி அவர்கள்.

டிசம்பர் 6ம் திகதி, தனது 57வது வயதில், சனிபுறூக் வைத்திய-சாலையில் தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சூழ்ந்திருக்க, மீளாத்துயில் கொண்டார்.

கடந்த ஆறு வருடங்களாக புரொஸ்ரேட் கான்சர் (சிறுநீர் வாயில் புற்றுநோய்) காரணமாக மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுவந்த டெய்லி, இவ்வருடம் செப்ரம்பர் மாதமளவில், தனது சிறுநீரகத்திற்கு புற்றுநோய் பரவியிருப்பதை உறுதி செய்தார்.

சிற்றி ரிவி (City TV) தொலைக்காட்சியின் சிற்றி நியூஸ் பிரிவில் தனக்கென தனியிடம் பிடித்துக்கொண்ட டெய்லி, யாரும் உடனடியாக ஊடுருவி செய்தி கேசரித்துவிட முடியாத பாதுகாப்பற்ற அல்லது அனுமதி வழங்கப்படாத இடங்களில்கூட, எப்படியோ துருவித்துருவி தகவல்களைச் சேகரித்து, சுடச்சுட வழங்குவதில் வல்லவர்.


வார நாட்களில், இரவு 11 மணிக்கு ஒளிபரப்பாகும் சிற்றி நியூஸ் செய்திச் சேவையை, சுவையும் தரமும் சுவாரஸ்யமும் நிறைந்ததாக மாற்றிய பெருமை இவரையே சாரும்.

அமெரிக்காவின் ஒஹையோ மாநிலத்தில் பிறந்த மார்க் டெய்லி, தொழில் ரீதியாக ஒரு கனரக வாகனச் சாரதி (Truck Driver). யங்ஸ்ரவுண் மாநில பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புத்துறை சார்ந்த பட்டப்படிப்பை முடித்த டெய்லி, சிறிது காலம் ஒரு கனரக வாகன சாரதியாகத் தொழில் புரிந்தார்.

பின்னர், ஒஹையோ மாகாண பொலிஸ் துறையில் இணைந்து, ஒரு பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றினார். பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலத்தில், ஒஹையோ மாகாணத்தில் இயங்கிய உள்ளூர் வானொலி ஒன்றுக்கு, நாளாந்த குற்றச்செயல்களைச் சேகரித்து தகவல் வழங்கும் அறிவிப்பாளராக செயற்பட்டபோதுதான், அவரது ஊடகத்துறை சார்ந்த திறமைகள் வெளிப்பட ஆரம்பித்தன.

எழுபதுகளில், கனடாவிற்கு இடம்பெயர்ந்து வந்த டெய்லி, வின்ட்சர் நகரில் இயங்கிய உள்ளூர் வானொலி ஒன்றிலும், பின்னர் ரொறன்ரோவில் இயங்கிய சூ-107 மற்றும் சம் (CHUM) போன்ற வானொலிகளிலும் சில காலம் அறிவிப்பாளராகக் கடமையாற்றி, பின் சிற்றி ரிவியுடன் கடந்த 31 ஆண்டுகளாகப் பணிபுரிந்துள்ளார்.

ஒன்ராறியோவில், குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகத்தில் நிகழும் அத்தனை குற்றச் செயல்களையும், பொலிசாரின் உதவியுடன், உடனுக்குடன் தொலைக்காட்சிக்கு எடுத்துவருவதில் வல்லவர் டெய்லி.



Mark Dailey

தொலைக்காட்சி அறிவிப்பாளராக மட்டுமன்றி, கனடாவில் வெளியான பூஷ்கான், கிளாயர்ஸ் ஹற் போன்ற பல திரைப்படங்களில் நடித்துள்ளதுடன், ஏராளமான கனடிய கார்ட்டூன் திரைப்படங்களில் பல்வேறு பாத்திரங்களுக்குக் குரல் கொடுத்திருக்கிறார்.

2004ம் ஆண்டு மார்க் டெய்லி புற்றுநோயால் பாதிக்கப்பட்டதிலிருந்து, தனது இறுதிக் காலம் வரை, ஆண்களுக்கு வரக்கூடிய பல்வேறு நோய்கள் குறித்த ஓர் விழிப்புணர்வைக் கொண்டு வருவதில் கடுமையாக உழைத்திருக்கிறார் டெய்லி.

தமது உடலில் இருக்கக்கூடிய நோய்களை அதிகம் வெளியே சொல்வதற்கு அல்லது காட்டிக்கொள்வதற்கு ஆண்கள் முன்வருவதில்லை என்பதை வெளிப்படையாக தனது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டு வந்த டெய்லி, சிறுநீர் வாயில் உருவாகும் புற்றுநொய் (புரஸ்ரேட் கான்சர்) உட்பட, ஆண்களைத் தாக்கும் பல்வேறு நோய்கள் குறித்தும் தொடர்ச்சியான பரப்புரைகளை மேற்கொண்டு வந்தார்.

மிகவும் துணிச்சலான ஊடகவியலாளராக மட்டுமன்றி, எதுவித பாதிப்புக்களையும் சவால்களையும் கண்டும் துவண்டு விடாத மனவலிமைகொண்ட ஒரு மனிதராக மார்க் டெய்லி அவர்கள் வாழ்ந்து காட்டியதுடன், தனது இறுதிக்காலம் வரை உற்சாகமாக தனது பணிகளை மேற்கொண்டு, பலருக்கும் பாடம் தரும் ஒன்றாக தனது முழு வாழ்வையும் அமைத்திருப்பது, நாமெல்லாம் கற்றுப் பயன்பெறத்தக்க ஒரு வாழ்க்கை நூலாகவே இருக்கப் போகிறது.

கடந்த மூன்று தசாப்தங்களாக கனடாவின் முகமாகவும், ரொறன்ரோவின் குரலாகவும் விளங்கிய மார்க் டெய்லி இப்போது 'முன்னாள்' என்ற பட்டியலில் ஒருவராகி விட்டாராயினும், இவரது முகமும் குரலும் ஒருபோதும் 'காலஞ்சென்ற'தாக மாட்டாது. அவை சிரஞ்சீவித் தன்மை பெற்றவை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜே. ஜே. அற்புதராஜா

# வீடுகளில் இடம்பெறும் வன்முறைகள்

சமீப காலங்களில் வீடுகளில் இடம்பெறும் வன்செயல்கள் அதிகரித்து வருவதாகக் காணப்படுகிறது. 1980ஆம் ஆண்டிலிருந்து பெண்ணியவாதத்துக்காகக் குரல் கொடுப்பவர்கள் இப்பிரச்சனைக்குத் தகுந்த நடவடிக்கையினை எடுப்பதற்கு முயன்று வருகின்றனர். அமெரிக்காவில் 1994ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பெண்களுக்கெதிரான வன்செயல்கள் தொடர்பான மசோதா வீட்டிட வன்செயல்கள், பாலியல் தாக்கல்கள், கூடா நோக்குடன் பெண்களைத் தொடருதல் போன்றவை குற்றச் செயல்களாக மத்திய அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டன. வடஅமெரிக்காவிலேயே வன்செயல்களுக்குள் அகப்படும் பெண்களுக்கு சுதந்திரமாக வாழ்வதற்கான மாற்று ஒழுங்குகளைச் செய்து கொடுப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

முதன் முதலாக வருங்காலச் சந்ததியினருக்கு இது தொடர்பான விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துதல் வேண்டும். பெண்களுக்கெதிரான வன்செயல்கள் தவறானது எனப் பாட-சாலைச் சிறுவர்களை உணரப் பண்ணுதல் வேண்டும். பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், வளர்ந்தவர்கள் ஆகியோர் பிள்ளைகளுக்கும் பதின்ம வயதினருக்கும் அறியத் தர வேண்டும்.

நம்மவர்கள் மத்தியிலும் புலம்பெயர்ந்த நாடுகளில் குடும்ப வன்செயல்கள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இங்குள்ள வாழ்க்கைச் சூழல் எமது குடும்ப வாழ்விற்குப் பெரும் சவால்களைக் கொடுத்துள்ளது. ஆண்களும் பெண்களும் வேலை செய்வதன் காரணமாகவும், பெண்களுக்கான உரிமைகளுக்கு இந்நாட்டில் சட்டரீதியான பாதுகாப்பு அதிகமாக உள்ளதனாலும் விவாக ஏற்பாடுகளைத் தாயகத்தில் முன்பு இருந்தது போல தீர விசாரித்துச் செய்ய முடியாதிருத்தலாலும்; கூட்டுக் குடும்பங்களின் பக்கபலன் இல்லாதிருப்பதனாலும் ஏனைய இனத்தவரின் வாழ்க்கை முறையின் பாதிப்புக்களினாலும் கணவன் - மனைவி உறவுகள் பெரிதும் மாற்றத்துக்குள்ளாகி விவாகரத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

'ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்' என்ற முதுமொழிப்படி தம்பதிகளுக்கிடையே நிலவும் பிணைப்பு பாலியல் கவர்ச்சிகள் மறைந்த பின்னர் நிலைத்திருப்பதற்குத் தேவையான அன்பு, பொது விருப்புக்கள், அர்ப்பணம் போன்ற நற்பண்புகள் இல்லாத மணவாழ்வுகள் புரையோடிப் போவதை அவதானிக்க முடிகிறது. கொலை, தற்கொலை போன்ற அசம்பாவிதங்களும் சம்பவிக்கின்றன.

சமீபகாலத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் குடும்பத் தகராறுகளும் வன்செயல்களும் விவாக முறிவு, விவாகரத்து போன்றவற்றிற்கு மேலாக பதின்ம வயதினரின் மனநிலையினை அதிகமாகப் பாதிக்கின்றது என அறியப்பட்டது. மேலும் ஆராய்ச்சியாளர்கள் வீட்டு வன்செயல்களில் அகப்படும் சிறுவர்களுக்கு தற்கொலை எண்ணங்கள், மன அழுத்தங்கள், நடத்தைப் பிறழ்வுகள், போதைவஸ்துப் பாவிக்க வேண்டும் என்னும் தீவிர விருப்பங்கள், அதிர்ச்சியால் ஏற்படும் குழப்பங்கள் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன எனக் கண்டறிந்துள்ளனர். இத்தகைய வீடுகளிலுள்ள சிறுமிகள் மதுபாவனை, பாடசாலைகளில் குறைந்த புள்ளிகள் ஆகிய பிரச்சனைகளினால் பாதிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இவ்வாறு வன்செயல்கள் இடம்பெறும் வீடுகளைச் சேர்ந்த பிள்ளைகளும் பதின்ம வயதினரும் மிகவும் பாரதூரமான நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய பாதிப்புக்களுக்களாகியுள்ளனர்.

அமெரிக்காவில் 31% ஆன பெண்கள் தமது கணவன்மார்களாலோ அல்லது ஆண் நண்பர்களாலோ மனவியல்ரீதியாகவோ அல்லது உடல்ரீதியாகவோ துன்புறுத்தப்படுகின்றனர். ஆகவே உடல்நலமும் உளநலமுமுள்ள ஒரு சமூகத்தினை உருவாக்க வேண்டிய அவசியத்தை நாமுணரக் கூடியதாகவுள்ளது. வீட்டு வன்செயல்களைத் தடுப்பதற்கு சமூக தாபனங்களுக்கும் தனிப்பட்ட சேவையாளர்களுக்கும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். வன்செயல்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என ஆண்களுக்கும் இளைஞர்களுக்கும் அறிவுறுத்துதல் இன்றியமையாதது. இதனால் பிள்ளைகளது வாழ்க்கையினைப் பெரிதாகப் பாதிக்கும் குடும்ப வன்செயல்களைத் தடுக்கலாம் - தவிர்க்கலாம். சமூகசேவை முகவர்கள் கடமைகள்:- சமூகசேவை முகவாண்மையர்களும் நீதிமன்றங்களும் இத்துறையில் பங்களிப்புச் செய்யலாம். பிள்ளைகளது தேவைகளைக் கவனிப்பதற்காக பிள்ளைகள் நலன்புரிப் பணியாட்கள் பயிற்றப்படுகின்றனர். அதேபோன்று வீட்டிலிடம்பெறும் வன்செயல்களினால் பாதிக்கப்படும் தாய்மார்களைக் கவனிப்பதற்குப் பிரத்தியேகப் பணியாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

குடும்ப வன்செயல்களைத் தவிர்ப்பதற்காக புதிய செயற்திட்டங்களை அமுல் செய்வதற்கு அரசாங்கங்கள் கூடிய நிதியினை ஒதுக்க வேண்டியுமுள்ளது. இதன் மூலமாக வளரும் பிள்ளைகளுக்கான சேவைகளை நடைமுறைப்படுத்தவும், வன்செயல் களால் பாதிக்கப்படும் இளம் குடும்பங்களுக்கு உதவவும் நடவடிக்கைகளை எடுத்திடவும் உதவும். மற்றும் இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும ஆரோக்கியமான வன்செயல்களற்ற தொடர்புகளைப் பேணக்கூடிய பொது அறிவுக்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தலாம்.

ஆய்வாளர்கள் குடும்ப வன்செயல்கள் நிலவும் தம்பதிகள் தொடர்ந்து விவாகப் பிணைப்பில் இருப்பது பிள்ளைகளைப் பாதிக்குமெனவும் அத்தகையவர்கள் மணவிலக்கு (விவாகரத்து) செய்து கொள்ளல் விரும்பத்தக்கது எனவும் அபிப்பிராயப்படுகின்றனர். மீண்டும் மீண்டும் துன்புறுத்தப்படும் தாய்மார்கள் வன்செயல்கள் இன்றிச் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையினைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு அரசாங்கங்களும் சமூக நிறுவனங்களும் உதவுதல் வேண்டும்.

பொருளாதார காரணங்களால் துன்புறும் தாய்மார்கள் தமது கணவன்மாரது தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டு வாழும் நிலை நீங்க வேண்டும். எமது நாட்டில், சமூகத்தில் பாதுகாப்பான குடும்பங்களும், பலமான சனசமூகங்களும், ஆரோக்கியமான சமூகமும் உருவாகுவதற்கு இத்தகைய சீர்திருத்தங்களும் நடவடிக்கைகளும் உதவும் என்பது கண்கூடு.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீத்தார் நினைவு

## புகழ்பூத்த ஊடகவியலாளர் எஸ். சிவநாயகம்



எஸ். சிவநாயகம் என்றதும் நினைவுக்கு வருவது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'சற்றர்டே றிவியூ' வாரப் பத்திரிகை. 1982இல் வெளிவர ஆரம்பித்த இப்பத்திரிகையே ஈழத்தமிழரின் ஆயுத விடுதலைப் போராட்ட நியாயத்தை முதன்முதலில் ஆங்கிலத்தில் உலகறியச் செய்தது. 1990களில் முழுநேர ஊடகவியலாளராக அறிமுகமான திரு. சிவநாயகம், கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளான டெய்லி நியுஸ், டெய்லி மிறர் ஆகிய பத்திரிகைகளில் பல வருடங்கள் பணியாற்றியவர். 1983ஆம் ஆண்டில் இராணுவ நெருக்கடிகளால் இவர் 'சற்றர்டே றிவியூ'விலிருந்து விலகி சென்னை செல்ல நேர்ந்தது. அங்கு, 'தமிழ் நேஷன்' என்ற ஆங்கில இதழைப் பிரசுரித்துக் கொண்டிருக்கையில், ராஜீவ் காந்தி கொலையையடுத்து, காரணமெதுவுமின்றிக் கைதாகி சிறையில் தள்ளப்பட்டார். 1993ல் பிரான்சில் அரசியல் அடைக்கலம் பெற்ற திரு. சிவநாயகம் லண்டனில் தங்கியிருந்து 'Hot Spring' என்ற ஆங்கிலச் சஞ்சிகையை வெளியிட்டார். 'Sri Lanka: witness to the History' என்ற 684 பக்க நூலையும், The Pen and the Gun என்னும் 292 பக்க நூலையும் எழுதி வெளியிட்ட சிவநாயகம் அவர்களை ஈழப்போரின் அடியம்சங்களுக்கு சரித்திரச் சாட்சியாக இங்கு தரிசிக்கலாம். கருத்தில் காரமானவராகவும், எழுத்தில் மகாதுணிச்சலானவராகவும் எம்மத்தியில் வாழ்ந்த புகழ்பூத்த ஊடகவியலாளர் திரு. எஸ். சிவநாயகம் அவர்கள் கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

## முதிர்ந்த படைப்பாளி ஈழத்துப் பூராடனார்



ஈழத்துப் பூராடனார் என்ற இலக்கியப் புனைபெயரில் உலகறிந்தவரான மூத்த படைப்பாளியும், பிரபல பிரசுரகர்த்தாவு-மான கதிர்காமத்தம்பி தாவீது செல்வராஜகோபால் அவர்கள் கடந்த மாதம் தமது எண்பத்தியிரண்டாவது வயதில் கனடாவில் காலமானார். ரொறன்ரோ 'றிப்ளக்ஸ்' அச்சகத்தின் நிறுவனரான இவர் சுமார் அறுபது ஆண்டுகளாக தமிழுக்கும், தமிழ்ப் பண்பாடு மற்றும் தமிழிலக்கியம் ஆகியவைகளுக்குச் சேவையாற்றியவர். உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் துணைத் தலைவராக நீண்ட காலம் இவர் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பின் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த இவர், நூறுக்குமதிகமான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அதேயளவு தமிழ் நூல்களைத் தேடிப்பிடித்து அழியவிடாது மீள்பதிப்பும் செய்துள்ளார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் செ. பூபாலபிள்ளை ஆகியோரின் மாணவரான ஈழத்துப்பூராடனார், சுவாமி விபுலானந்தரின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியமையைப் பெரும் பேறாகக் கருதி வந்தவர். மதுரை தமிழ்ச்சங்க பாலபண்டித பரீட்சையில் சித்தியடைந்த இவர், முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தாயகத்தில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவரது இலக்கியப் பணியை வியந்து கனடா 'தமிழர் தகவல்' 1991ஆம் ஆண்டில் இவருக்கு விருதும் தங்கப் பதக்கமும் வழங்கி மதிப்பளித்தது. கிழக்கிலங்கை பல்கலைக் கழகம் இவரது சேவைகளைப் பாராட்டி சில வருடங்களுக்கு முன்னர் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

## 'சேக்கம்' அமைப்பின் மலர்ச்சி விழா




கனடா சேக்கம் அமைப்பின் வருடாந்த மலர்ச்சி விழா கடந்த மாதம் 3ஆம் திகதி ரொறன்ரோ நியு ஜஸ்மின் விருந்துபசார மண்டபத்தில் நடைபெற்றது. தன்னார்வத் தொண்டர் பணி புரிந்த நால்வரும், ஒரு நிறுவனமும் சேக்கம் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர். விருது பெற்றவர்கள் விபரங்கள் வருமாறு: டாக்டர் இ. லம்போதரன் (Noble Spirit of Service), டாக்டர் கிளைனிஸ் ஜோர்ஜ் (Empowering Tamil Community), திரு. டேவிட் லைபர்மன் (Betterment of Tamil Seniors), டாக்டர் தாம் வசந்தகுமார் (Pillar of SACEM). Managent Advisory Services (Empowering Non-Profit Sector). விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மார்க்கம் நகரசபை உறுப்பினர் திரு. லோகன் கணபதி, மார்க்கம் படசாலைச் சபை உறுப்பினர் ஜெனித்தா நேதன், ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் திரு. றேமன்ட் ஷோ ஆகியோர் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிவிஜ நடத்திய 'சுப்பர் ஸ்டார்' பாடகர் போட்டி



சாம்பவி சண்முகநாதன்





ரிவிஜ தமிழ் தொலைக்காட்சி நடத்திய 'சுப்பர் ஸ்டார்' பாடகர் இறுதிப் போட்டி நிகழ்ச்சி கடந்த மாதம் 19ஆம் திகதி ஸ்காபரோ சீனக் கலாசார மண்டபத்தில் மண்டபம் நிரம்பிய ரசிகர்கள் மத்தியில் நடைபெற்றது. சீனியர், ஜுனியர் (மூத்தோர், இளையோர்) என இரு பிரிவுகளாக போட்டி நடத்தப்பட்டது. கடந்த பல மாதங்களாக நடைபெற்று வந்த பல்வேறு சுற்றுப் போட்டிகளில் இரண்டு பிரிவுகளிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பாடகர்கள் இறுதிப் போட்டியில் பங்குபற்றி மேடையில் தங்கள் திறமையைக் காட்டினர். 'சீனியர் சுப்பர் ஸ்டார்' பாடகராக செல்வி சாம்பவி சண்முகநாதனும், 'ஜுனியர் சுப்பர் ஸ்டார்' பாடகராக செல்வி மகிஷா பகீரதனும் தெரிவு செய்யப்பட்டனர். 'சீனியர்' பிரிவில் இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே மயூரன் தனஞ்செயன், றொவீனா ஞானபக்தன் ஆகியோர் வென்றனர். 'ஜுனியர்' பிரிவில் இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே சரிகா நவநாதன், சுவேதன் வேலாயுதர் ஆகியோர் வென்றனர்.

மகிஷா பகீரதன்







இரு பிரிவுகளிலும் முதலிடங்களைப் பெற்றவர்களுக்கு தலா இரண்டாயிரம் டாலர்களும், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு தலா ஆயிரம் டாலர்களும், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு தலா எழுநூற்றியைம்பது டாலர்களும் நிகழ்ச்சி 'ஸ்பொன்சர்' நிறுவன அதிபர் திரு. வரன் சின்னத்தம்பியால் வழங்கப்பட்டது. TVIயின் வெற்றிச் சின்னமான விருதும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. (ஒளிப்படங்கள்: Ninaivukal.com)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தேசத்தின் குரல்' நான்காவது ஆண்டு நினைவு நிகழ்வு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக சுமார் மூன்று தசாப்தத்துக்கும் மேலாகப் பணியாற்றிய 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு வைபவம் கடந்த மாதம் 19ஆம் திகதி ஸ்காபரோ கந்தசாமி மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்காபரோ தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரைகளும், எழுச்சி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.








## றொறன்ரோ வாகன வரி ரத்து

டேவிட் மில்லர் மேயராகவிருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்ட றொறன்ரோ வாகனங்களுக்கான வருடாந்த வரி அறுபது டாலர்களை புதிய மேயர் றொப் போர்ட் தமது முதல் நடவடிக்கையாக ரத்துச் செய்துள்ளார். இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து வரி ரத்து அமுலுக்கு வந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், சமய, நடன, மிருதங்க, இசை தொடர்பான புறோமாரின் சொந்தத் தயாரிப்புகள் யூன் 6ம் திகதிமுதல் விற்பனைக்கு வருவதால் அவற்றின் கொள்வனவாளர்கள் இந்த விளம்பரத்துடன்மேலதிக விலைக் கழிவையும் பெற்றுக்கொள்ளலாம்

உங்களுக்குத் தெரியும், நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

2010முதல் அதிகமான பொருட்கள்
எங்களின் சொந்த தயாரிப்பு என்பதால் இந்த
பொருட்களோ, விலையோ வேறு **எங்கும்** கிடைக்காது.



*On high, with your thoughts*

**PRO MAR**
**Awards & Promotions Ltd**

**www.promarawards.com 416-291 2344**

*585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5*

A B

**AB LEGAL SERVICES**
Professional Corporation

**Kauvsegan.E**
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

43

## இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம்!

காளமேகப் புலவர் அரசவைக்கு அழைத்துவரப்பட்டார். அரசனைக் கண்டதும் அவனை வாழ்த்தினார். ஆனால் அவனோ புலவரை மதிக்காமல் இருக்கையும் கொடுக்காமல் இழிவு படுத்தினான்.

புலவர் புன்முறுவல் செய்தார். அதிமதுரக்கவிராயரின் சூழ்ச்சிக்கு அரசன் அடிமையாகி விட்டான் என்பதை உணர்ந்தார். கண்களை மூடிக் கலைமகளை மனத்தினால் வணங்கினார்.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடென்னைச்
சரியாசனம் வைத்த தாய்!

எனும் வெண்பாவை காளமேகம் பாடவும் அன்னை கலைமகளின் அருளால் அரசனது அரசு கட்டில் வளர்ந்து இடம் கொடுக்கவே, அக்கட்டிலில் அரசனுக்குச் சரிசமமாக அமர்ந்து அவர்களது கேள்விகளுக்கு பதிலளிக்க அணியமானார். புலவரின் ஆற்றல் கண்டு அரசனும் அவையோரும் வியந்தார்கள். தண்டிகைப் புலவர்கள் அச்சப்பட்டார்கள்.

அரசன் அவரை யாரென்று வினாவினான். அவர் தான் "காளமேகம்" என்று பதிலுரைத்தார். அங்கு அரசவைக் கவியாக இருந்த அதிமதுரகவி என்பவர் அப்பொழுது காளமேகத்தைப் பார்த்து இகழ்ச்சியுடன், "மேகமென்றால் பொழிய வேண்டுமே?" என்று கேட்க அதற்குக் காளமேகம் "பொழியத்தான் வந்தது" என்று பதிலிறுத்தார். "எப்படி?" என்று மீண்டும் அதிமதுரகவி வினாவினார்.

கழியுந் திரைகட லுப்பென்று நன்னூற் கடலின் மொண்டு
வழியும் பொதிய வரையினிற் கால்வைத்து வான்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே!
எனும் பாடலைக் கூறினார்.

"உலகைச் சூழ்ந்துள்ள கடல் நீரில் உப்பு மிகுந்திருப்பதால், பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட நன்னூல் எனும் இலக்கண நூலாகிய கடலில் மொண்டு, அகத்தியன் தமிழ்படைத்த பொதிகை மலைமேல் நின்று, வானளாவிய கவிதைகளை உரைக்கின்ற புலவர்களின் மனதில் இடியென இடித்து, மின்னலென முழங்கி, கவிமழை பொழியக் காளமேகம் புறப்பட்டது" என்பது இந்தப் பாடலின் பொருள் ஆகும்.

அதிமதுரகவி இறுமாப்புடன் காளமேகப்புலவரை நோக்கி, "நான் யார் தெரியுமா? மூச்சு விடும் நேரத்தில் முன்னூறு நானூறு பாடல்களையும் ஆச்சென்று தும்மல் போடும் நேரத்தில் அய்நூறு பாடல்களையும் புனைந்து கூறும் வல்லமை படைத்த அதிமதுரகாவி நான்" என்ற பொருள்பட,

மூச்சுவிடு முன்னே முன்னூறு நானூறும்
ஆச்சென்றா லைந்நூறு மாகாவோ - பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே உன்னுடைய
கள்ளக் கவிக் கடையைக் கட்டு!
எனும் பாடலைக் கூறினார். வெள்ளைக் கவி என்றால் வெண்பா பாடும் புலவர் என்று பொருள்.

இம்மென்னு முன்னே எழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாவோ - சும்மா
யிருந்தா லிருப்பே னெழுந்தேனே யாகிற்
பெருங்காள மேகம் பிளாய்!
எனக் காளமேகம் மறுதலித்துப் பாடினார். அதன் பொருள் "இம்மென்று குரலெழுப்பும் நேரத்தில் எழுநூறு, எண்ணூறு பாடல்களையும் அம்மென்று வாயை மூடுவதற்குள் ஆயிரம் பாடல்களையும் புனைந்து கூறும் வல்லமை பெற்ற காளமேகம் நான். என் முன்னர் நீ ஒரு சிறு பிள்ளை" என்பதாகும்.

காளமேகப்புலவர் அங்கிருந்த தண்டிகைப் புலவர்களைப் பார்த்து நீங்களெல்லாம் யார் என்று கேட்டார். தலைக்கனம் மிக்க அந்தப் புலவர்கள் நாங்கள் கவிராசர்கள் என்று சொன்னார்கள். காளமேகம் உடனே கலகலவெனச் சிரித்தார். சிரித்தபடியே அவர்களை நோக்கிக் கவிதையொன்றை உதிர்த்தார்.

வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக்கால்!

கவி என்பதற்கு குரங்கு என்ற இன்னொரு பொருளும் உண்டு. தாங்கள் கவிராசர்கள் என்று அவைப்புலவர்கள் சொன்னதும், அப்படியானால் நீங்கள் குரங்குகளா? குரங்குகள் என்றால் உங்களின் வாலெங்கே? நீளமான வயிறெங்கே? முன்னங்கால்கள் எங்கே? உட்குழிந்திருக்கும் கண்கள் எங்கே? நீங்கள் குரங்குத் தலைவர்களென்றால் இவையெல்லாம் இருக்கவேண்டுமே? என்று ஏளனமாகப் பாடினார்.

காளமேகப் புலவர் சொல் விளையாட்டில் வல்லவர் என்பதை அவர் பாடிய இன்னொரு பாடல் கட்டியம் கூறுகிறது.

தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே - தாதொத்த
துத்தித் தாதே துதித்துத்தே தொத்தீது
தித்தித்த தோதித் திதி"

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடலைப் படித்தால் சற்று மலைப்பு ஏற்படும். அதன் பொருள் இது.

தாதி - தோழியின் (அடிமைப் பெண்ணின்)
தூதோ- மூலமாக அனுப்பும் தூது
தீது - நன்மை பயக்காது!
தத்தை- (நான் வளர்க்கும்) கிளியோ
தூது - தூதுப் பணியில் தூதை
ஓதாது - (திறம்பட) ஓதாது!
தூதி தூது - தோழியின் தூதோ
ஒத்தித்த தூததே - நாளைக் கடத்திக் கொண்டே போகும்.
தேதுதித்த - தெய்வத்தை வழிபட்டுத்
தொத்து - தொடர்தலும்
தீது - தீதாகும்
தாதொத்த - (ஆகவே) பூந்தாதினைப் போன்ற
துத்தி - தேமல்கள்
தத்தாதே- என் மேல் படராது
தித்தித்தது - எனக்கு இனிமையான தித்திப்பு நல்கும் என் காதலனின் பெயரை
ஓதித் திதி - ஓதிக் கொண்டிருப்பதையே செய்வேனாக!

நாம் கம்பர், வள்ளுவர், இளங்கோ, பாரதியார் போன்றோர் காலத்தால் அழியாத தேன்சுவை இலக்கியங்களைப் படைத்து என்றுமுள்ள செந்தமிழுக்கு சிறப்புச் சேர்த்த பெரும் புலவர்களை நாம் அறிவோம். அந்த வரிசையிலே வரலாற்றுக்கு எட்டாத காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரை எண்ணிக்கையற்ற புலவர் பெருமக்கள் இனிமைத் தமிழுக்கு வளமை சேர்த்துள்ளனர். அவர்கள் ஆக்கியளித்துள்ள இலக்கியங்கள் உலகை வியக்கவைக்கும் அறிவுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன.

ஆனால் தமிழ் இலக்கியம் என்றால் அதில் என்ன உயர்வு இருக்கிறது என்ற அலட்சியம் தமிழர்களிடம் உண்டு. சங்க கால இலக்கியங்கள் சரி, சங்கம் மருவிய கால இலக்கியங்கள் சரி, பிற்கால இலக்கியங்கள் சரி தமிழர்கள் தேடி நாடி விரும்பிப் படிப்பதில்லை. ஏதோ அவ்வப்போது அறிஞர்களும், பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் அவற்றை எடுத்தாள்வதைப் படிக்கிறார்களே ஒழிய அவற்றைப் தாமாக விரும்பிப் படிப்பதில்லை. தமிழ்ப் புலவர்களின் படைப்புக்களைப் படிப்போரின் எண்ணிக்கை தமிழ் கூறும் நல்லுலகில் அருகிக்கொண்டே வருகின்றது. (வளரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாஜினி பாலராஜன்

# பெண்ணின் பொழுது 30

சிறார்களுக்கான கைவினைப் பொருட்கள்

பொதுவாக எங்கள் வீடுகளில் பிள்ளைகள் அம்மம்மா அல்லது அப்பம்மாவுடன் வீட்டில் அதிக நேரம் செலவழிப்பது உண்டு. சில அம்மம்மா அல்லது அப்பம்மாக்கள் பிள்ளைகளின் படிப்பிலும் பழக்க வழக்கங்களிலும் கூடுதலான கவனம் செலுத்துவது உண்டு. அதே சமயம் சில வீடுகளில் பிள்ளைகள் வயதான-வர்களின் கண்காணிப்பில் இருப்பதால் நன்றாகத் தமிழ் கதைக்கப் பழகி இருப்பதுடன் நாடகம் பார்க்கவும் பழகி இருப்பார்கள். இவ்வாறு இவர்கள் வீட்டில் பெற்றோர் இல்லாத போது நாடகத்தினையும் பெற்றோர் வீட்டிற்கு வந்த பின்னர் தங்களுக்கு விருப்பமான கார்ட்டூன் பார்ப்பதும் வழக்கமாகி விடுகின்றது. பார்க்கப் போனால் அவர்கள் தொலைக் காட்சி முன் அமரும் நேரம் அதிகமாகி விடுகின்றது.




